விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.


# சத்தியவேத பாதுகாவலன்


சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் ,, 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone : No. 300


"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"


85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 17-ம் இலக்கம்


## கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்களும் இலங்கையின் ஏனைய கத்தோலிக்க மேற்றிராணிமார்களும் தங்கள் மேற்றிராசனங்களிலுள்ள குருமாருக்கும், விசுவாசிகளுக்கும் கர்த்தரில் சுபமும், ஆசீர்வாதமும் விரும்பி விடுக்கும் கூட்டுநிருபம்


கிறிஸ்துநாதரில் எமக்குமிகவும் அருமையானவர்களே!

**ஆரம்பவுரை :**

### உண்மையைப்போதிக்கத் திருச்சபைக்குரியகடமை.

அப்போஸ்தலர்கள் யூதகுருக்களாலும் மூப்பர்களாலும் அழைக்கப்பட்டு யேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றிப் பிரசங்கிக்கக்கூடாதென்று கற்பிக்கபபட்டபொழுது, "நாங்கள்பேசாதிருக்க முடியாதே" என்று கூறினர். (அ. ந. 4: 20.) இவ்வாக்கியமே திருச்சபையின் இடையீடற்ற வரலாற்றில் உண்மையையும், ஒழுக்கத்தையும் பாதுகாப்பதில் விருதுமொழியாக இருந்துவந்ததென்று கூறலாம். திருச்சபையானது தனது தெய்வீகபொறுப்பைப் பிரமாணிக்கமாய் உணர்ந்து, மாந்தரின் மனச்சாட்சிகளையும் செயல்களையும் அவர்களின் உண்மையான இறுதிக் கதியின் பாதையில் வழிநடத்த ஒருபோதும் தவறியதேயில்லை.

இக்கடமையை அது இரகசியமாக, அதாவது தேவாலயங்களிலும் அந்தரங்க இடங்களிலும் மட்டுமன்று, தேவைகள் எழுந்தபோது பகிரங்கமாகவும் அச்சமின்றியும், ஆண்டவருடைய வார்த்தைகளின்படி "அரமியங்கள்மேலும்" (மத். 10: 27) நிறைவேற்றிவந்துள்ளது. ஏனெனில், கர்த்தரின் நகரத்திற்கும் சாத்தானின் நகரத்திற்கும், ஞானமயமான நித்தியகருமங்களின் நகரத்திற்கும் லௌகிக அழிவுள்ள கருமங்களின் நகரத்திற்கும், உண்மையின் நகரத்திற்கும் பொய்மையினதும் தவறினதும் நகரத்திற்கும், புண்ணியத்தின் நகரத்திற்கும் பாவத்தின் நகரத்திற்கும் இடையே நிகழும் பெரும்போராட்டத்தில் திருச்சபையானது முன்னணியில் நின்று உண்மையைப்போதிக்கக் கடமைபூண்டுள்ளது. ஆபத்து எவ்வளவு சதியோசனைநிறைந்ததோ அவ்வளவுக்கு உலகம் முழுவதற்கும், சிறப்பாக விசுவாசிகளுக்கும் எச்சரிக்கைகொடுக்கத் திருச்சபைக்குரிய கடமையும் காத்திரமானதாகும். இத்தகைய சதியோசனையுள்ள ஆபத்துக்குக்



"குடும்பத்திட்ட இயக்கமே" ஓர் சிறந்தஉதாரணம் என்க. இவ்வியக்கமானது கருத்தடைமூலம் குடும்பத்தைக்கட்டுப்படுத்தும்படி பிரசாரம்செய்கின்றது. ஒருதேசத்தின் பொருளாதார, சுகாதாரப்பிரச்சனைகளை இலகுவாகவும், சித்திகரமாகவும், விரைவாகவும் தீர்ப்பதற்கு இதுவே சிறந்தவழி என்று அதுகூறுகின்றது. அக்கூற்றைப்பலரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். இதநிமித்தமே இதைச்சதியாலோசனைநிறைந்த ஆபத்தென்று அழைக்கின்றோம். அல்லாமலும், சமூக, அரசியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் குடும்பத்திட்டம் ஓர்சிறந்த வழியென்றும் தற்போது கூறப்படுகின்றது. சுருங்கக் கூறின் : ஓர்தேசத்தின் சகலஇன்னல்களுக்கும் அது சர்வசஞ்சீவியென்று கூறப்படுகின்றது. தற்சமய நலன்கள் பிரயோசனங்களில் ஊன்றிநிற்கும் காரணங்களைக்காட்டி மாந்தரின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்ப இவ்வியக்கத்தினர் முயலுகின்றனர். இவ்வியக்கம் ஓர் பேராபத்தாகவும் இருக்கின்றது. ஏனெனில், இறுதியில் அது தனிமனித, குடும்ப, சமூக, அரசியல் நல்வாழ்வுக்கும், சகல சன்மார்க்க, சமயக் [illegible] விளைவிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

### தற்கால சமூகநிலைபரங்களைத் திருச்சபை நன்குஉணருகின்றது.

நமது தேசமக்களில் அநேகரின் அட்டதரித்திர வாழ்க்கையையும் தங்கள் சீவியத்துக்காகஅவர்கள் நடாத்தும் வீரப்போராட்டத்தையும், மானிடநிலைக்குக் கீழ்த்தரமான கொடியவாழ்க்கை நிலைபரங்களையும் திருச்சபை உணராமலில்லை. மனிதனின் மானிட, தெய்வீக மகத்துவம் அலட்சியம்செய்யப்படின், 13-ம் சிங்கராயபாப்பரசர் கூறியதுபோல் "அடிமைத்தனத்திற்கு ஏறக்குறையச்சரிசமனான தாழ்நிலையிலும், கஷ்டங்களிலும் அவன்அகப்பட்டு வருந்துவானாயின், இத்தகைய நிலைபரங்கள் சமூகநீதிக்கு முரணானவை என்பதில் ஐயமில்லை." இங்ஙனம் கஷ்டப்படும் தொழிலாளவர்க்கங்களைப் பாதுகாக்கும்பொருட்டே மேற்கூறிய பேர்போன பரிசுத்த தந்தை சமூகப் பொது நிருபங்களை முன்னேக்குடன் விடுத்து சுயாதீன, கட்டுப்பாடற்ற முதலாளித்துவத்தை ஆதரித்தோரைத் திகிலடையச்செய்தார். சமூகப் பிரச்சனையைப்பற்றிய மேற்படி [illegible]நிருபங்கள் ஞானமும், தெளிவும், துணிகரமும் நிறைந்தவைகளாக விளங்குகின்றன. எனவே, உண்மையில்அவற்றைத் **தொழிலாளரின் உரிமைச்சாசனமாகக்** கொள்ளலாம்.

எங்கள் நாட்டுமக்களில் அநேகர் வறுமை, துன்பம் முதலிய இன்னல்களில்அகப்பட்டு வருந்துவதை நாம் அறியாமலில்லை. இவற்றைப்பற்றி அக்கறையற்றிருப்பதுமில்லை. நமது திவ்விய ஆசானுடன் நாமும்சேர்ந்து, "இந்தஜனங்களின்மேல் இரக்கமாயிருக்கின்றோம்" (மார்க். 8: 2.) என்று கூறவிரும்புகின்றோம். இவ்விடத்தில் நாம் 1955-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 10-ந் திகதி விடுத்த கூட்டுநிருபத்தை நினைவுறுத்த விரும்புகிறோம். அந்நிருபத்தில் சமூகநீதியைச் சார்ந்த கஷ்டமான பிரச்சனைகள், முதலாளி தொழிலாளிகளின் கடமைகள், உரிமைகள், தனிமனிதன் தனது மகிமையையும் சுயாதீனத்தையும் பாதுகாப்பதற்கு அவனுக்குள்ள அடிப்படையான அசைக்கமுடியாத தனிச்சொத்துரிமை, தனதுவாழ்க்கைக்கு அவசியமான அளவு படிபெறத் தொழிலாளிக்குரிய உரிமை, நீதியான சமூகத்திட்டத்துக்குரிய விதிகள்செயல்கள் என்பன பற்றிக் குறிப்பிட்டுள்ளோம்.

இலங்கையின் குடிசனத்தொகை, விசேடமாகச் சென்ற சிலவருடங்களில், தீவிரமாகப் பெருகிக்கொண்டுவந்துள்ளது. இதநிமித்தம் பற்பல இன்னல்கள் தோன்றியுள்ளனவென்பதை நாம் உணராமலில்லை.

சரீரசுகசம்பந்தமான காரணங்களின்நிமித்தம் பிள்ளைப்பேறு சிலபெண்களுக்கு வாதையையும் மனநோக்காட்டையும் உண்டுபண்ணும் பிரச்சனையாக இருக்கக்கூடும். இப்பேர்ப்பட்டவர்களின் மனச்சஞ்சலத்தைஅறிந்து நாம் அனுதாபப்படாதிருக்க முடியாது.

ஆனால், முறையற்ற கருத்தடைமுறைகளை உபயோகித்து குடும்பத்திட்டத்தை அனுட்டித்தல், உண்மையில் இப்பிரச்சனையைத் தீர்க்க வலிமையற்றதாகவிருப்பதுமன்றி தீமைநிறைந்ததும்,


[தொடர்ச்சி 5-ம் பக்கம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் நடைபெறும் கத்தோலிக்க கூட்டுறவு வாழ்க்கைமுறை

## ஆசீர்வாதப்பர் மடாலயத் துறவிகளின் ஓர் நவீன சாதனை

மூலம்: கதலின் ரேவ்லண்ட். தமிழாக்கம்: சா. பெ.

அப்போஸ்தலர் காலத்தில் ஆதிக்கிறீஸ்தவர்கள் பலர் தமக்குண்டானவற்றையெல்லாம் விற்றுவந்த கிரயத்தை எம்பெருமானின் அடியாரிடம் அளித்தபின் அன்னாரின் தலைமையில் செபமும், கடமையும்சேர்ந்த ஓர் கூட்டுறவு வாழ்க்கைமுறையை நடாத்திவந்தார்களென அப்போஸ்தலர்நடபடி மூலம் அறியக்கிடக்கிறது. இவ்வடிப்படையில் ஒரு கத்தோலிக்க கூட்டுறவு முறையான வாழ்க்கையை இங்கிலாந்திலுள்ள குளஸ்றர்பகுதியில் வதியும் புனித ஆசீர்வாதப்பர்சபைத் துறவிகள் வெற்றிகரமாக நிர்வகித்து வருகின்றனர்.

ராயெனசமுதாயத்தினர் எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் இந் நவீன கூட்டுறவாளரின் இலட்சியம் வேலையும், வேண்டுதலுமாகும். இவர்களது செயல்முறை இல்லறத்துடன் இணைந்துள்ளதோர் தூயவாழ்க்கையாகும். இச்சமுதாயத்தின் தலைவரும், போஷகரும் அம்மடாலயத்தின் பிரதம மடாதிபதியாவர். இவர்கள் பற்றிய சகலபிரச்சினைகளிலும் அன்னாரின் தீர்ப்பே இறுதியானதும், சட்டபூர்வமானதுமாகும்.

அங்கத்தினர் — ஏழு குடும்பங்களையும், நான்கு தனிப்பட்டோரையும் கொண்டது இக்குழு. அங்கத்தினரின் எண்ணிக்கை நாற்பத்திமூன்று. விவசாயம் இவர்களது பிரதான தொழில். இருவர்மட்டும் வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். பெண்களனைவரும் வரிசைக்கிரமமாகப் பொதுச் சமையலறையில் உணவு தயாரித்தல், இல்லங்களைச் சுத்தம்செய்தல், துணிகளைச் சலவைசெய்தல் ஆகிய கருமங்களை மேற்கொள்கின்றனர். குழந்தைகள் அயலிலுள்ள கத்தோலிக்க பாடசாலைக்குச்சென்று கல்விகற்கின்றனர்.

இல்ல வசதி — மூன்று குடும்பத்தினரைத்தவிர ஏனையோர் 130 ஏக்கர் விஸ்தீரணமுள்ளவோர் விவசாயப் பண்ணையில் வசிக்கின்றனர். அங்கு தனித்தனியான சயனகூடங்களும், ஒருபெரிய உணவுச்சாலையும், விஸ்தாரமான வரவேற்பறையும் உண்டு. இக்குழுவினர் அனைவருக்கும் உணவுதயாரிக்கக்கூடிய மிகப்பெரிய சமையலறையையும் இவ்வில்லம் கொண்டுள்ளது. ராயெனு சமுதாயத்தினரால் நவீன வசதிகளுடன் அண்மையில் கட்டியெழுப்பப்பட்ட புதிய இல்லங்களில் மூன்று குடும்பத்தினரும் வாழ்க்கை நடாத்துகின்றனர்.

நிர்வாகம் — வருடமொருமுறை அங்கத்தினரனைவரும் கூடித் தங்கள் குழுவின் பிரதமதலைவரையும், உபதலைவரையும், ஒவ்வோர் பகுதிகளின் நிர்வாகிகளையும தெரிவர். வாரமொருமுறை அனைவரும் கூடிய சமுகத்தில் பிரச்சினைகட்குரிய விடயங்களைக் கலந்தாலோசித்து முடிவுசெய்வர். இவர்களிடையே அபிப்பிராய பேதம் ஏற்படின்மட்டும் பிரதமமடாதிபதி கலந்துகொண்டு இறுதித் தீர்மானத்தைக் கூறுவார். ஞாயிற்றுக் கிழமைகளில் ஒருகுரவர் மடாலயத்திலிருந்து ராயெனு கூட்டுறவுப்பண்ணைக்கு விஜயம்செய்வார். காலைப்பூசை, பாவசங்கீர்த்தனம், மற்றும் ஞானக் கடமைகளை நிறைவேற்றியபின் மாலையில் திரும்புவார்.

தினந்த கடமைகள் — ராயெனு சமுதாயத்தினரின் கொள்கைகட்கும், இலட்சியங்கட்கும்இசைய அவர்களின் தினசரி கோருசிகை வகுக்கப்பட்டுள்ளது. அதிகாலை ஆறு மணியளவில் சிற்றாலயத்தில் அங்கத்தினரனைவரும் ஒன்றுகூடுகின்றனர். இச்சிற்றாலயம் முன்னர் தானியச் சேமிப்பறையாக விருந்தவோர் தேவதாருமரக் கட்டிடமே. காலைச்செபத்துடன் புனித ஆசீர்வாதப்பர்சபையினரின் மந்திரமாலையையும் ஓதுகின்றனர். பின்னர் குடும்பங்களாகப்பிரிந்து காலையாகாரம் அருந்துகின்றனர். சிறுவர்கள் கலாலயங்கட்கேக, மற்றையோர் தத்தம் கடமைகளில் ஈடுபடுகின்றனர். பகல் பன்னிருமணிக்கு எல்லோரும் ஒருங்குகூடி மதியஉணவருந்துகின்றனர்.

பின்னர் தம்கருமங்களில் வருந்தியுழைத்து, மாலை ஆறுமணிக்கு மீண்டும் சிற்றாலயத்தில் கூடுகின்றனர். மாலையாராதனை பாடப்பட்டபின் மந்திரமாலை செபிக்கப்படுகின்றது. குடும்பங்களாகப்பிரிந்து மாலையாகாரம் அருந்துகின்றனர். இரவில் மீண்டுமோர்தரம்கூடிச் செபித்தபின் நித்திரைக்கேகுகின்றனர்.

சனிக்கிழமைதோறும் இரவு ஏழுமணிக்கு அனைவருமகூடிக் கலந்தாலோசனை நடாத்தியபின் சமுதாய உணவை அருந்துகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பங்களாகப் பிரிந்தே உணவருந்துகின்றனர்.

குழந்தைகள் — சமுதாயத்தின் பொதுச்சொத்து என்ற பொதுவுடைமைத் தத்துவத்துக்கு ராயெனு குழு முழுமாறுனது ஆகும். குழந்தைகள் தம பெற்றோருக்கே சொந்தமானவர்கள். அவர்களை நிர்வகிக்குபொறுப்பும் பெற்றோருடையதே. அவர்கள் பதினெட்டாவது வயதையடையும் போது தாம் இக்குழுவில் இணைவதா அன்றேல் வேறுவழியை நாடுவதாஎன முடிவுசெய்வர். ராயெனு குழுவில் சேர ஆசிப்பின் முதலிரு வருடங்களை நவசந்நியாசத்தில் செலவிட்டபின்னரே நிரந்தர அங்கத்துவம் பெறுவர்.

(வளரும்)

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**வியாகுலத்தாயார்தினம் :**

பாரம்பரியம்பெற்ற நமதுஆலயபலி பீடத்திலும், நவமாகத் திருத்தி அமைக்கப்பெற்ற ஆலயமுகப்பிலும் தமதுவியாகுலகோலத்தோடு காட்சி தந்து,

**''இவ்வழியால் நடந்து போகிறவர்களே! நீங்கள் அனைவரும் உற்றுப் பாருங்கள், என்னுடைய வியாகுலத்துக்குச் சபமானதுண்டோ?''**

**(எரேமி 1:12.)**

என்று எம்மைப்பார்த்துக் கேட்டுக் கொண்டேயிருக்கும் வியாகுலஅன்னையின் திருநாளைச் சென்றதபசுகாலத்தின் 6-ம்வெள்ளியன்று (8-4-60) வியாகுலமாதா பத்திச்சபையினர் அமைதிகலந்தசிறப்புடன் கொண்டாடினர். திருநாளுக்குமுன் தினம் பிற்பகல் 6மணிக்குக் குருமாருடைய கருத்துகட்காகத் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர்ஆலயவீதி வழியே மெழுகுவர்த்தித்தீபங்களுடன் வியாகுலத்தாயின் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாக வந்ததும் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும், திருச்சுரூப ஆசீர்வாதமும் அருளப்பட்டன. திருநாளன்றுகாலை 6மணிக்கு வியாகுலமாதாபத்திச்சபையாரின் கருத்துகட்காகத் தோத்திர பாடற்பூசை நிறைவேறியது. பூசையின்பின் முன்சொன்ன பத்திச்சபையினர் ஒன்றுகூடிக் குருமனைசென்று கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகளைச் சந்தித்து அன்பளிப்பாக அங்கிலொன்றளித்து ஆசீர்வேண்டிநின்றனர். குரவரும்நன்றிகூறி, நன்மொழிகளுடன் நல்லாசியீந்து அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் பரிசுத்தவியாகுலமாதாவின் படங்கள்வழங்கினர்.

**பரிசுத்தவாரம் ஓசன்னுதினம் :**

பரிசுத்தவார ஆரம்பதினமாகிய குருத்துஞாயிறன்று அதிகாலை 5-30 மணி. ஆலயமணிகளின் ஆரவாரத்திடையே ஆசீர்வதிக்கப்பெறுத குருத்துகளைக் கரங்களிலேந்திய விசுவாசிகள் ''பாத்திமாகிரி'' மைதானத்தில் கூடினர். அங்குள்ளபலிபீடத்தில் பரிசாரகர் புடைசூழக் கட்டளைக்குரவர் குருத்துகளை ஆசீர்வதிக்கும் திருச்சடங்குகளை ஆரம்பித்தனர். அதன்மேல் ''ஓசன்னு, தாவீதின் குமாரனுக்குஓசன்னு!'' என்றுபாடி நமதுஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் ஜெருசலேமுக்கு ஒட்டோலகமாகச் சென்றகாட்சி தத்ரூபமாக நம்மவர்முன்தோன்றும் தோரணையில் கட்டளைக்குரவர் தமது குருத்தினைச் செங்கோலெனத்தாங்கி முன்செல்ல, விசுவாசிகள் பின்தொடர்ந்து ஆலயத்தை அடைந்ததும் பாட்டுப்பூசை நிறைவேறியது. 7-30 மணிக்குநிறைவேறிய 2-ம்பூசையின் பின் குருத்துகள் வழங்கப்பட்டன. திங்கள், செவ்வாய், புதன் மூன்று நாட்களிலும் காலை6மணிக்குத் திருச்சிலுவைப்பாதை முயற்சிசெய்து, பிற்பகல்3மணிக்குச் சிறார், பெண்கள், ஆண்கள்என்றமுறையில் பாவசங்கீர்த்தனம் கேட்கப்பட்டுப் பிற்பகல் 6மணிக்குப் பாட்டுப்பூசை நிறைவேறியது.

**நற்கருணைத்தினம் :**

14-4-60 பெரியவியாழனன்று பிற்பகல்6மணிக்குப் பாடற்பூசை, பாதங்கழுவுபசடங்கு, புதியபீடத்துக்கு நற்கருணைச் சுற்றுப்பிரகாரம் ஆதியன நடந்தேறின. இவற்றிற்கு இவ்வருடம் எமதுஆலயம் போதிய இடவசதிதந்து, சுற்றுப்பிரகாரம் ஆலயத்தின் சிறகுவிறுந்தைவழியாகச் செல்வதற்கும், விசுவாசிகளினவசதிக்கும ஏற்றதாயிருந்தமை குறிப்பிடற்குரியது. அன்று இரவும், பெரியவெள்ளியன்றுபகலும் இடையறாது ஆராதனைகள்நடந்தேறின.

**திருப்பாடுகளின்தினம் :**

15-4-60 திருப்பாடுகளின் தினமாகிய பெரியவெள்ளியன்றுகாலை வியாகுலபிரசங்கம் வாசித்துச் சிலுவைப்பாதை சுற்றப்பட்டது. பிற்பகல்3மணிக்கு ''ஸ்ராபற்மாத்தர்'' என்னும் கீதம்பாடியபின் பிற்பகல் 4மணிக்குத் திருச்சிலுவைவணக்கம் நடந்து நற்கருணை திரும்பவும் பெரிய பீடத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுத் திவ்வியபூசை நிறைவேறியது. இவற்றில் ஏராளமானவிசுவாசிகள் கலந்துகொண்டார்கள்.

**ஈஸ்றர் விழிப்பு :**

16-4-60 சனியன்றுஇரவு 11மணி. ஆலயமுன்றிலில் புதியநெருப்பு ஆக்குதல், பாஸ்குவர்த்தி ஆசீர்வதித்தல், சுற்றுப்பிரகாரம, ஞானஸ்நான வார்த்தைப்பாடு புதுப்பித்தல் என்பன நடைபெற்றன.

**ஈஸ்றர் தினம் :**

தொடர்ந்து நடுச்சாமப்பாடற்பூசை ஆரம்பமானது. பூசையின்போது ''கர்த்தர் உயிர்த்தெழுந்தார், அல்லேலுய்யா'' என்று பரிமளிப்பாகப் பாடிய பாடற்பூசையின்போது கட்டளைக்குரவர் யாவருக்கும் அல்லேலுய்யா வாழ்த்துக்கூறி வியாகுலத்தாயார் இன்று சந்தோஷமாதாவாகி, நமக்கும் சந்தோஷத்தை அருளினர் என்னும் பொருள்பட அரியதோர் பிரசங்கம் செய்தனர். காலை6-30மணிக்குப்பாடற்பூசை நிறைவேறியது. 7-30மணிக்கு ஆயித்தியமலைச் சதாசகாயமாதாஆலயத்தில் வண. எல் ஆர். அன்ரனி சுவாமிகளால் பாடற்பூசைநிறைவேற்றித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம அருளப்பட்டது. பிற்பகல்4-30மணிக்குச் செபமாலை, பாட்டுப்பிரார்த்தனை, தேவநற்கருணை ஆசீர்வாதம் என்பனவற்றுடன் பரிசுத்தவாரநிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

—பங்குக்கிறீஸ்தவன்

# திருமண உற்சவம்

ஆனைக்கோட்டைவாசரான காலஞ்சென்ற திரு. எஸ்.ஆர். பர்னந்துஎன்பவரின் புதல்வரும், குடிசனமதிப்பு இலாகாவில் புள்ளிவிபர ஆராய்ச்சியாளராகக்கடமையாற்றுபவருமான திருவளர் செல்வன் ஆர். எவ். தர்மப்பிரகாசம் அவர்களுக்கும், மாட்டின் வீதி, யாழ்ப்பாணவாசரும், P. W. D. கந்தோரில் பிரதம குமாஸ்தாவாயிருந்து இளைப்பாறியவருமான திரு. எஸ். ஏ. இராசேந்திரம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வி திருவளர்செல்வி ஸ்ரெல்லாசொர்ணமலர் அவர்கட்கும் சென்ற சித்திரைத் திங்கள் 23-ம் திகதி சனிக்கிழமை காலை 7மணியளவில் யாழ்ப்பாணம் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே பெருந்திரளான இனசனர், சிநேகிதர் சமுகமாயிருக்க வண. ஜே. பி. செல்வராஜா சுவாமியவர்களால் மெய்விவாகத் திருச்சடங்கு மணிநாதம் ஒலிக்க, வெடிகள் சப்திக்க, வெகுசிறப்பாக இனிது நடந்தேறியது.

அதன்மேல் தம்பதிகள் குருமனையடைந்து விவாகப்பதிவு செய்தனர். பொலிஸ் இலாகாவில் கடமையாற்றுபவர்களான திரு. ஏ. ஆர். சந்தியாப்பிள்ளை அவர்களும், திரு. என். பி. நாதன் அவர்களும் சாட்சிகளாகக் கைச்சாத்திட்டனர். பின்னர், தம்பதிகள் குரவர் ஆசிபெற்று ஆலயத்திலிருந்து புறப்பட்டபோது அதன் முன்றிலில் திரு. ஸ்ரிபினல் புஷ்பாரஞ் சூட்டப்பெற்று. மோட்டோரதரூடாய் இனசனர் சிநேகிதர் புடைசூழ வீதியுலாப்போந்து மணமகள் மன்றல்மனைசேரவே. அங்கு பரிமளிப்பாக வரவேற்கப்பட்டனர். அடுத்து, 25-ம்தேதி பிற்பகல் 4மணியளவில் ஆனைக்கோட்டையில் மணமகன் மன்றல்மனையிலும் பெருமிதமான உபசரணைகள் நடைபெறலாயின. அங்கு நடைபெற்ற கதம்பக்கச்சேரி, வைபவத்தை மேலும் சிறப்பித்தது. இப்புதிய தம்பதிகள் அட்ட ஐசுவரியங்களும்பெற்று, இன்புற்று வாழ இறைவனின் இணைமலரடிகளை இறைஞ்சுகின்றோம்.

— நிருபர்

பெரியவல்லரசுகள் தங்கள்வசம் கையிருப்பிலுள்ள அணுக்குண்டு ஆயுதங்களை ஒழிக்கவேண்டும்; ஏனையவல்லரசுகள் தங்கள் அணுஆயுதங்களை ஒழித்துக்கட்டுமானல் பிரான்ஸ் தனது அணுஆயுதப் பரீட்சைகளை மகிழ்ச்சியுடன் நிறுத்திக்கொள்ளுமென்று பிரான்ஸிய ஜனதிபதி தெகோல்அவர்கள் சென்ற 7-ந்திகதியன்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் பேசியபோது கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச். பேதுருவானவர்
மகாதேவாலய சதுக்கம்,
வத்திக்கான் நகரம், 7–4–1960.

காற்றுடன் கலந்துவரும் செய்தி

# தந்தை அருளப்பர் பேசுகின்றார்
## நேர்மைக்கும் உலகிற்கும்

வண. நீ. மரியசேவியர்

எழுதுவதற்கு அளவுஉண்டு; எழுத்துக்கும் வரைஉண்டு. ஆனால், எழுதப்படும் உணர்ச்சிதான் சிலவேளைகளில் கட்டற்றது. அது எழுதுகோலின் குறைஅல்ல; எழுச்சியின்நிறை. இதே போன்ற உணர்ச்சிதான் இன்றுதோன்றியது. மழை தூறிக்கொண்டிருந்தது. மக்கள்அதைப் பாவாய்பண்ணவில்லை. குடை இருக்கின்றதல்லவா?......ஆலயத்துக்குஉள்ளும், முகப்பிலும் பூசைப் பலிகள் நிறைவேறின. பூசைகள்முடிவு பெற்றதும் அருளப்பபாப்பரசர் முகப்பு மாடிக்குவந்தார். மக்கள் கரகோஷஞ் செய்தார்கள். "வாழ்க! பாப்பரசர்" என்று வாழ்த்துரைகள் வழங்கினார்கள்...... ஆனால், எப்போது அமைதியாயிருக்கவேண்டுமென்பது அவர்களுக்கு நன்றாகத்தெரியும். தந்தைபேசினார். அவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அங்குநின்றவர்கள் மாத்திரமல்ல. அமெரிக்காவில் வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது. ஐரோப்பியர்கள் ரெலிவிஷன் - வானொலிமூலம் கண்டார்கள்! கேட்டார்கள்!

அன்பார்ந்த பிள்ளைகளே, ...

பாஸ்காப்பண்டிகை ஒருதிருவிழா; சிறப்பான சடங்கு. திருவழிபாட்டுவருடத்தின் மற்றெந்தப் பெருநாளையும் விட உயர்வானது. பெருநாட்களின் பெருநாள்; சடங்குகளின் சடங்கு (Festa festorum sormnitas solemnitatum). மனிதஉருத் தரித்த வார்த்தையானவருக்கும், பரிசுத்த திருச்சபைக்கும் இடையிலுள்ள தெய்வீகஉறவைக் கொண்டாட மிகவும் பொருத்தமான மணக்கீதம்என்று பரிசுத்ததந்தைபுனிதகிறகோரியார்அன்று வாழ்த்தினார்.

இந்தப் பாஸ்குத்திருநாளில் யேசு மீட்பருக்கு வணக்கவழிபாடு செலுத்துவதுதான் நல்லகிறீஸ்தவர்களாகிய எங்களுடைய உரிமையான மகிழ்ச்சி. அவர் மகிமைநிறைந்தவர்; இறப்புஅற்றவர்; மரணத்தையும், மனிததீமையையும்— மனிதனுடைய முதற்பாவத்தின் தீமையை— உலகத்தின் எல்லாப் பாவங்களினதும்தீமையை—முறியடித்த வெற்றிவீரன். இறைவனுடைய குமாரனும், மரியாயின்மகனுமாகிய அவருக்குநாம் கடமைப்படாதிருக்க எவ்வாறு இயலும்? ஏன், அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றவர்களுக்கே அவருடைய இரத்தத்தின்பலனாய் மன்னிப்பு அளிக்கப்பட்டது. அதுமாத்திரமா? காலாகாலத்தில் இரட்சணியமும், மீட்பும் உறுதியாக்கப்பட்டு, நியதியின் விளைவிலிருந்து உயர்த்தப்பட்ட பாவக் கறைபடிந்த மனுக்குலத்திற்கு மன்னிப்புக் கோரப்படவில்லையா?

துக்ககரமான தாழ்ச்சிபொருந்திய இந்தப்பாடுகளை—மரணத்தைக் கடந்த நாட்களில் இதயக்குமுறலுடன் நினைத்துக்கொண்டோம். இருந்தும், அது புகழ்நிறைந்தபோர். அதைப் பாஸ்காத் திருச்சடங்குகளில் வெற்றிச்சுரத்தில் பாடித் தியானித்தோம். மரணமும், வாழ்வும் கடுமையான போர்ஒன்றில் பொருதுகின்றன. ஆனால், வாழ்வின் ஊற்றானவர் வெற்றிவீரர்ஆகினார்— அவர் எப்போதும் வாழ்கின்றார்— எப்போதும் அரசாளுகின்றார்.

அன்பார்ந்த பிள்ளைகளே! அதே போர் உலகில் இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது என்பது உங்களுக்குத்தெரியும். கேட்டிருப்பீர்கள். நாங்கள்எல்லோருமே அதில் பங்குபற்றுகிறோம். ஒருபுறத்தில் கிறீஸ்துநாதர் அவருடைய பிரதிநிதிகளுடன் — திருச்சபையில் தம்மைவழிபடுகிறவர்களுடன் — தூய்மையான உயர்ச்சியிலும், சகோதர மனப்பான்மையுடன் நிற்கின்றார். திருச்சபையினுடையபக்கம் உண்மைப்போதகம். அதில் நீதி, சமாதானம் சார்ந்திருக்கின்றன. மறுபுறத்தில் தவறான கிறீஸ்துவ முரண்பாட்டு உணர்ச்சி; சுயவாழ்வைப்பற்றியும், சமூக வாழ்வைப்பற்றியும் தவறான அறிவு, அட்டூழியம்! மூர்க்கத்தனம்! அழிவும், சிதைவும்தரும் ஒழுங்கற்றநிலை. இதுதான் இவ்வுலக வாழ்க்கையின் தன்மை.

அன்பார்ந்த பிள்ளைகளே! உலகம் முழுவதிலும் எமது குரலொலியைக் கேட்டுக்கொண்டிருக்கும் அன்புநிறைந்த மக்களே! மிகவும்தெளிவான ஒவ்வொருவருடைய அந்தஸ்தும் அவசியமானது. சிறப்புப்பொருந்திய மக்களுக்குக் கண்ணியம் செய்யவேண்டும். கடமை உணர்ச்சி — நேர்மையான ஒழுக்கநெறியில் செயலாற்றுதல் — விடடுக்கொடுப்பதற்குப் பயம்— எண்ணத்திலும், செயலிலும் கடவுளுக்கும், மனிதனுக்கும்முன் நேர்மை இவைகளை அது விதிக்கின்றது.

இறைவன் தம்முடைய வாக்குறுதியில் தவறாதவர். தமது நன்மையின் கொடைகளையும், வெற்றியின் அன்பளிப்புகளையும் இந்த உலகத்திலும் நமக்கென்று ஒதுக்கிவைத்திருக்கின்றார் என்றஉறுதி ஆறுதல்அளிக்கின்றது. ஆனால், இந்தஉறுதியைத் தகுதியுடன் பெற்றுக்கொள்ளவேண்டும்.

புனிதஅகுஸ்தீனார் கடந்தநாட்களில் கட்டளைச்செபத்தில் சிந்தனையிலும், செயலிலும், வாழ்க்கையிலும் கபடம் அற நடந்துகொள்ளப் புத்திபுகட்டுகின்றார். "களங்கமான வாழ்க்கையை நடத்திக்கொண்டும் தங்களைக் கிறீஸ்தவர்களென்று கூறிக் கொள்பவர்கள் கிறீஸ்துநாதருக்குத் தீங்குசெய்கின்றார்கள். அவர்களுடைய குற்றத்தினால் இறைவனுடையபெயர் கறைப்படுகின்றது. அதற்குமாறாக வருத்தப்படும் இறைவனின் புனிதகட்டளைக்கு அமைந்துவாழ்ந்தால் அவருடைய பெயர் புகழப்படும்; வாழ்த்தப்படும்" என்றுகூறுகின்றார்.

அன்பார்ந்த பிள்ளைகளே! அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் என்னகூறுகின்றார்? கேளுங்கள்: "நாங்கள் கிறீஸ்துநாதரின் நறுமணம். அது எல்லாஇடங்களுக்கும் — அதாவது எங்கே எங்களுடைய விசுவாசமும், உழைப்பும் நிலைபெற்று ஒளி கொடுக்கின்றனவோ அங்கெல்லாம் பரந்து, விரிந்து மணம்வீசுகின்றது" எனஉரைக்கின்றார். •

இந்தப் பாஸ்காநடுப்பகலில் எங்களைச் சுற்றியுள்ளஎல்லாம் நம்மைத் தெய்வீகஇன்பத்திற்கு அழைக்கின்றன. ஆனால், கணக்கற்ற எம்சகோதரர்கள் தனிச்சுதந்திரம், சமூகச்சுதந்திரம், மதச்சுதந்திரம் அற்றவர்களாகவும் வாடுகின்றார்கள். வருடத்திற்கு வருடம் எதிர்ப்புக்கும், தாக்குதல்களுக்கும் உள்ளாகின்றார்கள். தொடர்ந்துநடக்கும் தாக்குதலிலும், அமைதியிலும்பலிநிறைவேற்றுகின்றார்கள். கத்தோலிக்க ஒருமைப்பாட்டின் இதயத்திலே இருந்துகிளம்பும் தந்தையின் இந்த ஆறுதல்மொழிகளை அல்ல அதன் எதிரொலியை அவர்களும் கேட்டாலோ! என்று உள்ளம்விழைகின்றது. அவர்களுடைய துன்பத்திலே அகத்தாலும், செபத்தாலும் நாங்கள் பங்குபற்றுகிறோம். அவர்களுடைய அந்தத் துன்பம் பரிசுத்ததிருச்சபையின் நலனுக்கு மாற்றப்படுகின்றது.

இனப்பிரிவின் விளைவாலோ அல்லது சிக்கலும், தொல்லையுமான பொருளாதாரநிலைமையினாலோ அல்லது இயற்கையான சமூகஉரிமைகள் மறுக்கப்படும் காரணத்தினாலோ வருத்தப்படும் இறைவனுடைய மற்றும்பிள்ளைகளும் எமது கவலைதோய்ந்த மனத்திரையில் தோன்றுகின்றார்கள். அதே வேளையில் இதயத்தில் இருந்துஎழும்பும் உணர்ச்சிநிறைந்தபேச்சு ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தேவநியமனத்தால் குறிக்கப்பட்டநாளில் மலரவேண்டிய மனிதகிறீஸ்தவ ஒற்றுமையைத் தாண்டவேண்டும்.

ஓ, யேசுவே! இரட்சகரே! மீட்பரே! இன்றும்என்றும் எமதுஅன்பாக, காலவரையற்ற ஆதரவாக இருந்தருளும். எங்களுக்குமாத்திரமல்ல ஆனால், உமதுநாமத்தினதும், சுவிசேஷத்தினதும் காரணமாக உமது இரத்தத்தின் பலியால்தோய்ந்து வாழ்ந்துவருத்தப்படுகிறவர்களுக்கும் துணையாயிரும்.

ஆம், பாஸ்காவிலிருந்து வருடம்கால ஓட்டத்தில் இறங்குகின்றது. சமயகுடியாட்சி சமுதாயஅரங்கில் எமதுவாழ்க்கை வகுக்கும்கடமைகளை நிறைவேற்றுவோமஎன்ற வாக்குறுதியை உமக்கும் புதுப்பிக்கின்றோம்.

ஓ,யேசுவே! மரணத்தையும்,பாவத்தையும் வெற்றிகண்டவீரனே! நாங்கள் உம்முடையவர்கள். உமக்கு உரியவர்களாயிருக்க விரும்புகின்றோம். நாமும், எமது அன்புக்குரியவர்கள், அருமையானவர்கள், இளமையின் உற்சாகத்திலும்,முதிர்வயதின் அறிவிலும், தவிர்க்கமுடியாத துன்பத்திலும், முதுமையின் தியாகத்திலும் எப்போதும் உம்முடையவர்கள்.

உம்முடைய அன்பர்களுக்கு முதல் முறையாகப் பாஸ்காக்காலையில் காட்சியளித்ததுபோல் மாடத்திலும், கடலிலும், பாதையிலும் அடுத்தடுத்தகாட்சிகளில் தொடர்ந்து செய்ததுபோல் எமக்கு உமதுஆசீரை அளித்தருளும்! முழுஉலகத்திலும் உமதுசமாதானத்தைப் பரப்பியருளும்! "பயப்படாதீர்கள், நான்தான், உங்களுக்குச் சமாதானம்உண்டாவதாக." இதுதான் உத்தியோகபூர்வமான பேச்சு. ஆனால், பரிசுத்த தந்தைக்கு அது திருப்தியை அளிக்கவில்லை. இன்னும் ஏழுபாஷைகளில் திருநாள்வாழ்த்துகள் வழங்கினார். கேட்டுநின்றமக்கள் அடைந்தமகிழ்ச்சியையும், மலர்ச்சியையும்குறித்து எழுதுவதற்குப் பேனாமறுக்கின்றது. தமிழ்ப்பாஷையும் தெரிந்திருந்தால் தெள்ளிய இனியதமிழிலும் வாழ்த்துரைகள் கூறியிருப்பார்அல்லவா?

---

● சென்றவருடம் புரட்டாசிமாசத்திலே மன்னிப்பருளப்பட்டு சிறைச்சாலையிலிருந்துவிடுதலையடைந்த சீனாவின் கடைசிச்சக்கிரவர்த்தியான ஹென்றி பூயி தற்போது அங்கே தாபர ஆராய்ச்சித் தோட்டம்ஒன்றில் வேலைசெய்துகொண்டிருக்கிறாரெனச் சீனப் பிரதம மக்கள் நீதிமன்றத்தின் தலைவரான ஸியேசுயேஸாய் சென்ற10-ந் திகதியன்று பீக்கிங்நகரில் தெரிவித்திருக்கின்றார்.

● இங்கிலாந்திலே சமய மாற்றம் ஏற்படுவதற்கு முன் ஆங்கிலேயரான கத்தோலிக்ககுருமார் பாராளுமன்றத்தில் தங்கள் பிரதிநிதிகளாக மேற்றிராணிமாரைக் கொண்டிருந்தனர். இவர்கள் பிரபுக்கள்சபையில் அங்கத்தவர்களாய் இருந்துவந்தனர். கத்தோலிக்ககுருமார் இன்றும் அச்சபையில் அங்கத்தினராய் இருக்கலாம். ஆனால், பொதுமக்கள் சபையிலிருந்து அவர்கள் விலக்கப்பட்டுள்ளார்கள்.

---

## மன்றாட்டுப் பலன்

(பாலர்பக்கத் தொடர்ச்சி)

லால் அவர்கள் தமையனிடம்விளக்கம்கேட்டனர்.

"நாம் பிரியதத்த மந்திரத்தைச் சொல்லும்பொழுது யாரைக் குறித்துச் சொல்லுகிறோம்? எனக் கேட்டான். அதற்கு அவர்கள் தேவதாயாரைக் குறித்தே சொல்கிறோமென்றனர்.

"நாம் பிரியதத்த மந்திரத்தைச் சொல்லும்போது தேவதாயாரை வாழ்த்துகிறோமல்லவா? நாம் தேவதாயாரை வாழ்த்துவதற்குக் காரணம், அவள் தேவனின் தாயாரென்பதும், கன்னிமகிமை கெடாதவள் என்பதுமே. ஆகவே, தேவதூதன் மங்களம் சொன்னதையும், அதைத் தேவதாயார்ஏற்றுக்கொண்டவுடன் இஸ்பிரீத்துச்சாந்துவினால் நிரப்பப்பட்டு யேசுவுக்குத் தாயானாள்என்பதையும் தியானிக்கவேண்டும்."

தேவதாய் சென்ம மாசில்லாதவளாய் இருப்பதால், பாவிகளாயிருக்கிற எங்களுடைய மன்றாட்டைக் கேட்டருளும்படி தியானித்தும் செபத்தைச் சொல்லவேண்டும் என்று தமையன் விளக்கம் கொடுத்தான்.

றெஜீனவும், [illegible] பூசைக்குச் செல[illegible] தமையனின் விளக்கத்தை மனதில் இருத்திச் செபம்செய்துகொண்டு வந்தார்கள். சிலநாட்கள் பூசைக்குச் செல்லாமல் செபம் சொல்லிக்கொண்டுவந்த அவர்களுக்குப் பூசைக்குச் செல்லவேண்டுமென்ற ஆசையும் ஏற்பட்டது. இந்த ஆசை எவ்விதமேற்பட்டதென்பது அவர்களுக்கே விளங்கவில்லை. அவர்கள் எதைச் செய்யத் தவறினாலும் பூசைக்குச் செல்லவும், திவ்வியநன்மை வாங்கவும், பத்தியாய்ச் செபிக்கவும் தவறமாட்டார்கள். ஒவ்வொருசெபத்துக்கும் தமையனிடம் விளக்கம் கேட்டனர். தமையனும் மிகுந்த அன்புடனும், ஆசையுடனும் அவர்களுக்கு விளக்கம் கொடுத்தான்.

தமையனின் கண்டிப்பாலும், கோபமான பேச்சாலும் திருந்தாத அவர்கள், திருந்துவதற்குரிய சக்தி அவர்களுக்கு எவ்விதம் வந்ததென்பதை அறியாதவர்களாயிருந்தார்கள் ஆனால், தமையனர் அறிந்திருந்தார். அவர்கள் பூசைக்குப் போக விரும்பாதநாட்களில் தேவதாயாரைக் குறித்துப் பத்தியுடன் சொல்லிய மூன்று [illegible]மந்திரங்களே அவர்களை [illegible]திருப்பியது.

அவர்கள் தங்களுக்குத் தெரியாமலே தேவதாயாரிடம்மன்றாடி இவ்வரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆகவே, நாங்கள் எங்களுக்குக் கஷ்டம் வரும் வேளைகளில் தேவதாயாரை நோக்கிச் செபிப்பதின் மூலம் அக்கஷ்டம் தீரும், அன்றேல் குறைக்கப்படும் என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**வைகாசி—1960**

| | | | |
|---|---|---|---|
| 8 | ஞா. | பாஸ்காவின்பின் 3-ம் ஞாயிறு அர்ச். மிக்கேல் அதிதூதரின் தினம் | (வெ) |
| 9 | தி. | அர்ச். நசியான் சென் கிறகோரியார் மே. வே. பா. | (வெ) |
| 10 | செ. | அர்ச். அந்தோனியஸ் மே. வே. பா. | (வெ) |
| 11 | பு. | அர்ச். சின்னயாகப்பரும் பிலிப்பும், அப். 2-ம் வகுப்பு | (சி) |
| 12 | வி. | அர்ச். நேரியுஸ் தோ. வே. | (சி) |
| 13 | வெ. | அர்ச். றொபெட் பெல்லாவினர் மே. வே. பா. | (வெ) |
| 14 | ச. | மரியாயின் சனி | (வெ) |

சத்திய வேத

# பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
வைகாசி 5-ந் திகதி

## அடுத்த பொதுத்தேர்தல்

அண்மையிலே எமதுநாட்டில் பொதுத்தேர்தல் ஒன்று பெருமுழக்காக நடைபெற்றது. அதில் தத்தம்அரசியற்கட்சிகளே பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று, அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுஆட்சிப்பீடத்தில் அமரப்போவதாக அங்கங்கெல்லாம் தேர்தல்பிரசாரங்களின் போது அவைகள்பெரும்ஆரவாரமெல்லாம் செய்தன. ஆனால், அவர்கள் நினைத்தது ஒன்று. நிகழ்ந்தது மற்றொன்று. தேர்தலின்விளைவாய் ஜனநாயககட்சிகள் எதிர்பார்த்தவாறு பெரும்பான்மை அங்கத்துவபலத்தை அடைந்ததுமில்லை. தன்னிலே தானே தனித்துஊன்றிநிற்கக் கூடிய ஒருஜனநாயக ஆட்சிப் பலத்தைக் கண்டடைந்ததுமில்லை. ஆயினும் ஜனநாயகமே வேண்டும், மாக்ஸியவாதிகளின் சர்வாதிகாரஆட்சியோ வேண்டாமென்று மக்கள் முடிவுகட்டிவிட்டார்களென்பதையே சென்ற பொதுத்தேர்தல்முடிவு தெளிவாக நிரூபிக்கலாயிற்று.

நிற்க, அடுத்தபொதுத்தேர்தலுக்கு இன்னும்சரியாய் எழுபத்தைந்துதினங்கள் — அதாவது இரண்டரைமாதங்கள் உள்ளன. ஆயினும் மேதினத்தோடு தேர்தல்கர்ச்சனைகள் எழத்தொடங்கிவிட்டன. முற்போக்குக்கட்சிகள், பிற்போக்குக்கட்சிகளென்ற கோஷங்களை மாக்ஸியவாதிகள் கிளப்பத்தொடங்கியுள்ளார்கள். ஐக்கியதேசியக் கட்சியைத் தோற்கடிப்பதையே தங்கள் இலட்சியமாகக்கொண்டுள்ள இவர்கள் ஐ. தே. கட்சி வீழ்க, முதலாளித்துவம் வீழ்கவெனக் கூச்சலிடுகின்றார்கள். அரசியல்துறை, பொருளாதாரத்துறை, சமூகத்துறை, வருமானத்துறை ஆதியாம் பல்வேறுதுறைகளிலும் கடந்தசிலஆண்டுகளாக எமதுநாட்டில் வீழ்ச்சியே ஏற்பட்டுவந்துள்ளது. மக்களின் பல்வேறு சுதந்திரங்களையும் நிலைநாட்டுவதான ஜனநாயகஆட்சி எமதுநாட்டில் நீடித்துநிலைபெறவேண்டுமானால் பொதுத்தேர்தலில் மக்கள் ஜனநாயககட்சிகளுக்கே தங்கள்வாக்குகளை அளிக்கவேண்டும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலமுடைய ஜனநாயககட்சிஒன்றை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தவேண்டும். அந்தக்கட்சியும் நாட்டின் பிரச்சினைகளை ஜனநாயகமுறையில் தீர்க்கவல்லகட்சியாய் இருக்கவேண்டும். அன்றேல் சர்வாதிகாரஆட்சிக்கு அடிகோலித் தங்கள்சுதந்திரங்களையெல்லாம் அவர்கள் இழக்கவேண்டிய சங்கடநிலைமை ஏற்படும். ஜனநாயக லட்சியங்களைப் பாதுகாப்பதற்கும், ஜனநாயகத்தைப் பாதுகாத்து வைப்பதற்குமாக எமதுநாட்டு மக்களுக்குக் கொடுபட்டுள்ள கடைசிச்சந்தர்ப்பமாகவும் அடுத்தபொதுத்தேர்தல் ஒருவேளை இருத்தல்கூடும்.

நிற்க, இந்நாட்டிலுள்ள இரு பெரும்பான்மைச் சாகியத்தினரான சிங்களவருக்கும், தமிழருக்குமிடையே நல்லெண்ணமும், நட்பும் இல்லாதபட்சத்தில் அமைதிநிலவுவதோ, சுபீட்சம் வளருவதோ, தொழில்துறைகள் முன்னேறுவதோ அசாத்தியம். மொழிப்பிரச்சினை, பிரசாஉரிமைப் பிரச்சினைமுதலாம் முக்கிய பிரச்சினைகள் சுமுகமாகத்தீர்க்கப்பட்டு வகுப்புகளிடையே நல்லெண்ணமும், நல்லுறவும் திரும்பவும் ஏற்படும்வரை நாட்டில்சமூகஅமைதி ஏற்படவே மாட்டாது. நாட்டிலே அமைதியில்லையென்றால் உருப்படியான எந்தவேலைத்திட்டத்தையும் எந்த அரசியல்கட்சி அரசாங்கமும் நடாத்திவைப்பது இயலாக்கருமம் என்க.

---

### பதிவுகோரியுள்ள கட்சிகள்

அங்கீகரிக்கப்பட்ட அரசிற்கட்சிகளாகத் தங்களைப் பதிவுசெய்யுமாறு கேட்டு இம்முறைஐக்கியதேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜ கட்சி, தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி, லங்கா பிரஜாதந்திரக்கட்சி, கம்யூனிஸ்தகட்சிமுதலாம் ஒன்பதுகட்சிகள் மனுச்செய்திருக்கின்றன. இந்த அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் அபேட்சகர்கள் கட்டுப்பணச்சலுகைபெற்றுக் கட்டுப்பணமாக 500ரூபா கட்டவேண்டியவர்கள். ஏனைய அபேட்சகர்கள் கட்டுப்பணமாக 1,000 ரூபா கட்டவேண்டும். சென்றபொதுத்தேர்தலில் 23கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன. தங்களைப் பதிவுசெய்யுமாறுகேட்டு மனுப்பண்ணியுள்ள ஒன்பதுகட்சிகளும் சென்ற பொதுத்தேர்தலில் தங்களுக்குஅளிக்கப்பட்ட சின்னங்களையே இம்முறையும் கோரியுள்ளன.

### அரசாங்கத்துக்குக் கிடைத்தநயம்

நிகழும் அரசிறைவருடத்திலே பாராளுமன்றம் இருமுறைகலைக்கப்பட்டதினால் எம். பி. களுக்கும், உதவிமந்திரிகளுக்கும் சம்பளமாகவும, அலவன்ஸாகவும்கொடுக்கப்படவேண்டியிருந்த பன்னிரண்டரைலட்சம்ரூபாவும் கொடுபடாதகாரணமாக அரசாங்கத்துக்கு அத்தனைலட்சம்ரூபாவும் மிச்சமாகியிருக்கிறது. அத்துடன் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இலவசம்றெயில் வேப்பிரயாணவசதிகளும், தெலிபோன், தந்திவசதிகளும நிறுத்தப்பட்டமையால் அரசாங்கத்துக்கு மேலும்அதிக பணம் மிஞ்சியிருக்கிறது. பாராளுமன்ற எம். பி. ஒருவருக்கு மாதம்ஒன்றுக்குச் சம்பளமாக 600ரூபாவும், அவர்களின் காரியதரிசிகளுக்கு அலவன்ஸாக 100ரூபாவும் வழங்கப்படுகிறது. மந்திரிஒருவருக்கு மாதம்ஒன்றுக்கு 1,500 ரூபாசம்பளமும், உதவி மந்திரிஒருவருக்கு 1,000 ரூபாசம்பளமும் வழங்கப்படுகிறது.

---

**புனிதவளனூர் ஆசிரியபயிற்சிக் கலாசாலை**

**கொழும்புத்துறை**

## ஞானோபதேச தத்துவப்பத்திரம்

சிரேஷ்ட வகுப்புக்களில் ஞானோபதேசம் கற்பிப்பதற்காக ஷெ கலாசாலையில் அளிக்கப்பட்ட விசேஷ பயிற்சியில் 1959-ம் ஆண்டிற் சித்தியடைந்த ஆசிரியர்களின் பெயர்கள் வருமாறு. இவர்களுக்கு அடுத்து வரும் பழைய மாணவர் தினக் கொண்டாட்டத்தின்போது தத்துவப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**விசேஷ சித்தி**

1. சங். சிஸ். மேரி அன்செல்ம், திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.

**திறமைச் சித்தி**

2. சங். சிஸ். மேரி வபியானு, திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.

**சாதாரண சித்தி**

**ஆண்கள்**

3. அ. அதிரியான் சோசை, வங்காலை.
4. ம. அ. மைக்கல் விஜயன், நாரந்தனை.
5. இ. பிரான்சிஸ் லெம்பேட், வங்காலை.
6. யோ. யோண்பிள்ளை, நெடுந்தீவு.
7. அ. ச. லோறன்ஸ், சில்லாலை.
8. யு. வின்சென்டிபோல் பீரிஸ், தோப்பு.
9. செ. செபமாலை, முருங்கன்.

**பெண்கள்**

10. சங். சிஸ். மேரி எட்விஜ், திருக்குடும்பக் கன்னியர்மடம், வங்காலை.
11. சங். சிஸ். மேரி பார்பறு, மாசில்லாமாதா மடம், யாழ்ப்பாணம்.
12. சங். சிஸ். மேரி தெக்ளா, திருக்குடும்பக் கன்னியர்மடம், இளவாலை.
13. சங். சிஸ். மேரி கொஸ்கா, நசரேத் மடம், யாழ்ப்பாணம்.
14. லூ. மி. பற்றீசியா, ஏத்துக்கால்.
15. சங். சிஸ். மேரி அலெக்சிஸ், திருக்குடும்பக் கன்னியர்மடம், இளவாலை.
16. பே. அந்தோனியாப்பிள்ளை, கரம்பொன்.
17. சங். சிஸ். மேரி பெற்றோனில்லா, திருக்குடும்பக் கன்னியர்மடம், பறப்பான்கண்டல்.
18. செ. லூர்தம்மா, மன்னார்.
19. சி. லூர்துநாயகி, இளவாலை.
20. ச. றீற்று, யாழ்ப்பாணம்.
21. த. மேரி லற்றிஷியா, தூவனை.
22. வ. சூ. பெ. வியற்றிஸ், குடாப்பாடு.

கொழும்புத்துறை
1-5-60

சுவாமி வ. தியோகுப்பிள்ளை,
அதிபர்.

---

## சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

### 10. காணிக்கையும், சுத்திகரமும்—லூ. II. 22-39a

**1. சுத்திகர நாட்கள்** (22) — மோசேசின் பிரமாணத்தின்படி ஒரு பெண் தனது பிரசவத்துக்கு 40 [பெண்குழந்தைக்கு 80] நாட்களுக்குப் பின் தேவாலயத்தில் ஒரு வருட வயதுள்ள ஆட்டுக்குட்டி ஒன்றையும், ஒரு புறுவையும் பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். வறியவளாயிருந்தால் ஆட்டுக்குட்டிக்குப்பதிலாக இன்னுமொரு புறுவை ஒப்புக்கொடுக்கலாம் குரு இவைகளைப் பலியாக்கினபின்பு இவைகளின் இரத்தத்திலிருந்து கொஞ்சத்தைப் பெண்மேல் தெளித்து அவள் சுத்தியாகிவிட்டாள் என்று கூறவேண்டும். மரியாய் சுத்தங்கெடாத பிரசவத்திற்குப்பின் தமக்குக் கடமையில்லாவிட்டாலும் இந்தப் பிரமாணத்தை அனுசரித்தாள். வறியவளைப்போல இருபுறுக்களையே ஒப்புக்கொடுத்தாள்.

**2. கருப்பையைத் திறந்து பிறக்கும் ஆண்** (23) — என்பதற்கு அர்த்தம் தலைப்பேறான குமாரன். [8-ம் இல. 4-ம் குறிப்புக் காண்க]

**3. ஒப்புக்கொடுக்கவும்** (23) — சருவேசுரன் எஜிப்து தேசத்தில் இஸ்றாயேலரின் தலைப்பேறான குமாரர்களை மரணத்தில் நின்று தப்ப வைத்ததற்கு ஞாபகமாக அன்றுதொடங்கி அப்படிப்பட்ட குமாரர்களைத் தமது ஊழியத்திற்குப் புறம்பாக்கிவைத்தார் (யாத். xiii. 12). தமது ஊழியத்திற்கு லேவியர் நியமிக்கப்பட்டபின் மற்றக் கோத்திரங்களின் தலைப்பேறான குமாரர்களுள் தொடக்கத்தில் லேவியரின் தொகைக்குமேல் அதிகமானவர்களை மாத்திரமும் (எண். iii. 45-27), அதன்பின் எல்லாரையும் பிறந்து ஒருமாசம சென்றபின் ஒவ்வொருவருக்காக 5 வெள்ளி சீக்கல்கள் கொடுத்து மீட்கும்படி கற்பித்தார் (எண். xviii. 15-16). யேசு தேவ குமாரனானபடியால் இந்தப் பிரமாணத்தை அனுசரிக்கவேண்டியதில்லை. என்றாலும், அவர் அதை அனுசரித்தார்.

**4. புறசாதிகள்** (32) — இரட்சணியம் யூதருக்கு மாத்திரமல்ல, சகல மனிதருக்கும உரியது என்பது சுவிசேஷ ஆரம்பத்திற்றானே வெளிப்படையாக்கப்பட்டது.

**5. வாள் ஊடுருவும்** (35) — மரியாய் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டு யேசுவின் சிலுவைப்பலியில் பங்குபற்றுவாள். ஆகையாற்றான் அவளை யேசுவோடு உடன்மத்தியஸ்தி என்கிறோம. யேசு மனுக்குலம் முழுவதையும், ஆகையால் மரியாயையும் இரட்சித்தார். மரியாயின் மத்தியஸ்தம் யேசுவின் இரட்சணியப் பேறுகளைச் சகல மனிதருக்கும் செலுத்த உதவுகிறது. மற்ற நீதிமான்களின் மத்தியஸ்தம் யேசுவின் சிலபேறுகளைச் சிலருக்குச் செலுத்த உதவுகிறது.

**6. வெளிப்படும்படியாகும்** (35) — யேசுவின் வருகைக்குப் பிறகு எல்லாரும் ஒன்றில் அவரை ஏற்று நித்தியசீவியத்தை அடைவார்கள், அல்லது அவரை விரோதித்து நித்தியகேட்டுக்கு உள்ளாவார்கள். நடுவில் நிற்க முடியாது. அவரை ஏற்பவர்கள் தங்கள் புண்ணியச் சிந்தனைகளையும், அவரை விரோதிப்பவர்கள் தங்கள் பாவச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராணிமார்களின் கூட்டுநிருபம்

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

சன்மார்க்கத்திற்கு முரணானதுமாகவும் இருக்கின்றதென்பதை நாம் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றோம். இத்துடன் மேற்படி முறைகள் தீயனவாகவிருப்பதற்குக்காரணம் திருச்சபையின்கண்டனம்அல்ல; அவைதீயனவாயிருப்பதன் நிமித்தமே அவற்றைத்திருச்சபை கண்டிக்கின்றது என்பதையும் இங்குதெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். உலகிலுள்ள மதங்களுள் கத்தோலிக்க திருச்சபை அங்கத்தினரின் தொகையிலும், ஆட்சிமுறையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதநிமித்தம், அதன்படிப்பனைக்குத் தனிச்சிறப்பான பெறுமதியும், மக்களின் கவனத்தைக் கவரும் வன்மையும் உண்டென்பதில் ஐயமில்லை. எனினும், நாம் முன்பு கூறியதுபோல், செயற்கைக்குடும்பத்திட்டமுறைகள் தீயனவாகவிருப்பதன்காரணம் திருச்சபையின் கண்டனம்மாத்திரமன்று, ஆனால், அவை சுபாவப்பிரமாணத்துக்கு மாறானவையாகவும் மனிதருக்கு உண்மையில் தீங்குவிளைவிப்பனவாகவும் இருப்பதுமேயாம் சுபாவப்பிரமாணமானது திருச்சபைக்கும் அரசாங்கத்திற்கும் முந்தியது; மானிடசட்டத்திற்கு மேலானது. ஆகவே, எல்லாமனிதரையும் கடமைப்படுத்தக் கூடியதொன்ருகும்,

## 1-ம் பாகம்

### கருத்தடைமூலம் அனுட்டிக்கப்படும் குடும்பத்திட்டம் தீங்குநிறைந்தது.

குடிசனப்பிரச்சனை மிகவும்சிக்கலான தொன்ருகும். அது இன சம்பந்தமான, பொருளாதார, அரசியல், அம்சங்களை அடக்கியுள்ளது. இத்தகைய சிக்கலான பிரச்சனையைத் தனிஉயிரியல் முறையை உபயோகித்துத் தீர்த்துவிட எத்தனித்தல் மடமைத்தனமாகும். இத்தகைய முறை ஆபத்துநிறைந்ததென்று கூறின், அது மிகையாகாது. மதசம்பந்தமற்ற பத்திரிகைகளுமே இதைஉணர்ந்துள்ளன. பிரித்தானியதேசத்தின் பத்திரிகையொன்று கருத்தடைக்கருவிகளை உபயோகிக்க ஓரளவுஅனுமதி அளிக்கப்பட்டதைக்குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "இவ்வனுமதி அச்சத்தில் உற்பத்தியாகி, விட்டுக்கொடுக்கும்மனப்பான்மையில் பிறந்துள்ளது." வேருெருபத்திரிகை: "இத்தீர்மானம் விவாகத்திற்கும், தாய்மைக்கும், தந்தைத்தன்மைக்கும், குடும்பத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் சாவுமணியடித்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளது.

ஆனல், முறையற்ற வழிகளைத் தழுவிச் சனத்தொகையைக் கட்டுப்படுத்திக் குடிசனப்பெருக்கப் பிரச்சனையைத் தீர்க்கமுடியாது. அன்றியும், இம்முறை மானிடவர்க்கத்திற்குத் தனிமனித, சமூக, தேசிய, பொருளாதார, ஆகிய எல்லாத்துறைகளிலும் நிச்சயமாய்த் தீங்குவிளைவிக்கும் என்று அழுத்திக்கூறவிரும்புகின்ருேம்.

நீண்ட, சிக்கலான காரணங்களை எடுத்துக்கூறுவதிலும் பார்க்க விஞ்ஞானத்துறையிலும் இதர துறைகளிலும் ஆராய்ச்சியின் பயனகப்பெற்ற முடிவுகளை மட்டுமே இங்குகுறிப்பிட விரும்புகின்றோம். மேற்கூறிய கருத்தடைமுறைகளின் தன்மையை அவற்றின்தீய கனிகளிலிருந்தே நன்குகணித்துக் கொள்ளலாம்

(அ) தனிமனிதத்துறையில்:

கருத்தடையைப் போதியசிந்தனையன்றி, அன்றேல் ஆர்வத்துடன்தானும் ஒருசிலவைத்தியர் சிபார்சுசெய்யக்கூடும். ஆனல், இவர்களுடைய கூற்றுக்குமாருக அநேக வைத்தியர்கள் தங்கள் குரலொலியைஎழுப்பி கருத்தடையின் தீங்குகளைக்குறித்துப் பலத்த எச்சரிக்கை செய்துள்ளனர். இயற்கையை ஏமனஞ் செய்தால் தப்பாது தண்டனை வரும் என்பதே அவர்களுடைய பொது அபிப்பிராயமெனக் கூறலாம். வைத்தியத்துறையில் கீர்த்தி பெற்ற சில வைத்தியர்கள் கருத்தடைமுறையின் ஆபத்துக்களைத் திட்டவட்டமாக கூறியிருக்கின்ருர்களென்பது மறுக்கமுடியாது. இவர்களுடைய அபிப்பிராயங்களைஎளிதில் தட்டிக்கழிக்கவும் முடியாது.

(ஆ) சமூகத் துறையில்:

குடும்பக்கட்டுப்பாட்டு அனுட்டானம் ஒருநாட்டில் பரவும்போது, அந்நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் சன்மார்க்க, ஆத்மீக, இலட்சியங்கள் தளர்ச்சியடைகின்றனவென்று சமூகசாஸ்திரிகள் பொதுவில் குறிப்பிட்டுள்ளனர். இத்தீய பயன் அட்டதரித்திரத்தையோ, அணுக்குண்டையோவிடஅதிக தீங்குவிளைவிக்கக்கூடியதென்பதில் ஐயமில்லை.

ஆனல், குடும்பமே சமுதாயத்தின் அடிப்படைஅம்சமாக விளங்குகின்றபடியால், குடும்பக்கட்டுப்பாடு சமுதாயத்திற்கு விளைவிக்கும் தீங்குகளுள் குடும்பசீவியத்தை வேரோடு அழித்துவிடுவதேமாபெரும் தீங்கென்று கூறவேண்டும். கருத்தடைமுறைகளின் உபயோகம் தனிமனிதனின் சுயநலநாட்டத்தை ஊக்குவித்து குடும்பசீவியத்தைச் சிதைக்கின்றது. இதைத்தொடர்ந்து சமூகஒற்றுமையில் பிளவும், தேசாபிமானத்தில் தளர்ச்சியும் ஏற்படுகின்றன. தனிமனிதரைக் குடும்பத்திலும், அதற்குமேற்பட்ட சமூகங்களிலும் இணைக்கும் பந்தனங்கள் தளர்த்தப்படுகின்றன. இத்தகைய சமூக சூழ்நிலையில் பற்பல சமூகதீமைகள் இலகுவில் தலைகாட்டும். இவற்றுள் விவாகரத்து, கருவழிப்பு, தற்கொலை என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

இங்ஙனம் கருத்தடைஎன்னும் சமூகப்புற்றுநோய் மக்களின் சன்மார்க்க சக்திகளுக்குப் படிப்படியாக உலைவைக்கின்றது. சுஸ்திகளை அனுபவிப்பதற்கு அவசியமான தன்னடக்கமும் மனத்தைரியமும் அற்றுப்போக, அவற்றிற்குப்பதிலாகச் சுயநல நாட்டமும், மனநெகிழ்ச்சியும் தோன்றிச் சன்மார்க்க வீழ்ச்சிக்குப், அழிவுக்கும் வழிகோலும்.

(இ) தேசீயத்துறையில்:

கட்டுப்பாடும் சன்மார்க்கமுமற்ற நாடு நிச்சயம் அழிவுறும். ஏனெனில், ஒழுக்கத்தரம் பாழடைவதன்நிமித்தம் அந்நாட்டு மக்களின் வலிமையும், சுயாதீனமும் நிச்சயமாக வீழ்ச்சியடையும். செயற்கைமுறைகளைப் பின்பற்றிச் சனத்தொகையைக் கட்டுப்படுத்த முயன்ற தேசங்கள் எல்லாம் அழிந்தொழிந்து போயினவென்று சரித்திரமேயெமக்குச்சான்று பகருகின்றது. கிரேக்கநாட்டுத் தத்துவசாஸ்திரிகள் சனத்தொகையென்னும் பூச்சாண்டிக்கு எதிராகப் பிரசாரம்செய்தார்கள். இதன்பயனக அந்நாடு சனத்தொகைகுறைந்து, வலிமைகுன்றி, ரோமருக்கு அடிபணியவேண்டியதாயிற்று." ரோமஇராச்சியமும் அதேசதுப்பு வழியைப்பின்பற்றி அழிவுற்றது. எங்களுடைய காலத்திலும் சனத்தொகைப்பெருக்கென்னும் பூச்சாண்டியால் சிலநாடுகள் பீதியடைந்து, தாம் கனவுகண்ட நிறைவுக்கும் சுபீட்சத்திற்கும் செயற்கைமுறைக் குடும்பத்திட்டத்தையே சாத்தியமான முறையென வரவேற்றனர். ஆனல், இன்று அந்நாடுகளை தேசியஅழிவென்னும் மிகக்கோரமான வேருெரு பூச்சாண்டி அச்சுறுத்திநிற்கின்றது.

இந்தியபொதுமக்களின் முன்னேற்றத்திற்குத் தேசாபிமானத்திற் சிறந்தவராகிய மகாத்மா காந்தியைப்போல் உழைத்தவர்கள், வேறுயாரும் இல்லையென்று கூறலாம். தமதுநாட்டினரின் சமூக, பொருளாதாரக் கஷ்டங்களைக்கண்டு அவர்மனங்கசிந்துருகினர். எனினும், கருத்தடைமுறையை ஐயந்திரிபறக் கண்டித்துள்ளார். இதில் ஆச்சரியம் எதுவும்இல்லை. வேறுதேசியத்தலைவர்களும் இவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிவந்துள்ளனர்.

(ஈ) பொருளாதாரத்துறையில்:

கருத்தடை பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்க்கவல்லதன்று. இது, ஒருநோயைத் தீர்க்க வேறுவழிவகைகள் இருக்க, உடலின்ஓர் அங்கத்தைச் சேதமாக்குவதற்குச் சமமாகும். வறுமைக்குத் தகுந்த ஔடதம் பிள்ளைகளின் தொகையைக் குறைப்பதல்ல, தொழிலுக்குரிய வேதனத்தைக் கூட்டுவதேயாகும். சேரிப்புற வாழ்க்கைக்குத்தகுந்த நிவாரணம் சிறுசிறு குடும்பங்களல்ல, விசாலமான அநேகவீடுகளைக் கட்டுவதேயாகும். போஷிப்புக்குறைவுக்கும், நோய்க்கும் மாற்றுமருந்து முறையற்றவழிகளை உபயோகித்துப் பிள்ளைப்பேற்றைக் கட்டுப்படுத்துவதல்ல, சுகாதாரத்தை உயர்த்துவதேயாகும். சமூகஅநீதிகளை மூடிமறைப்பதற்கு ஓர்வழியாகவே கருத்தடைப்பிரசாரம் செய்யப்படுகின்றது.

பொருளாதாரத் துர்ப்பிரயோகத்திற்கு இலக்காகவுள்ள அதிர்ஷ்டமற்ற ஏழைஎளியவர்களின் துன்பநிலையின் மட்டில் அனுதாபம் காட்டுவதன் நிமித்தமே குடும்பத்திட்ட இயக்கம் மக்களின் கவனத்தைக் கவருகின்றது. ஆனல், தீமையைத்தீர்க்கச் சுட்டிக்காட்டப்படும் நிவாரணம் அநியாயத் துர்ப்பிரயோகம் செய்வோரைத் தாக்காமல், அநியாயங்களைக் களைந்தெறிந்து திருப்தியையும், சுபீட்சத்தையும், உண்டுபண்ணக்கூடிய ஒருபொருளாதாரத்திட்டத்தை வகுத்து அமுல்நடத்துவதற்குப்பதிலாக, உண்மைக் குற்றவாளிகளை அவதானியாமலிருக்கச் செய்கின்றது. அவர்களைத்தொடாது, அவர்களின் அநியாயங்களை மறைத்து, அநீதியான ஓர்சமூகஅமைப்புக்கு வெளிப்பூச்சுப்பூசி, அதைநிரந்தரப்படுத்துகின்றது; அரசாங்கத்தின் மந்தநிலைக்கு அடிகோலுகின்றது; பொதுமக்களின் மனச்சாட்சியை உணர்ச்சியற்றதாக்குகின்றது. மேற்கூறிய இருமுறைகளிலும் எதுசுயநலம் நாடும், பேராசையுள்ள தனவான்களுக்கு விருப்பமாயிருக்குமென்றுசொல்லாமலேவிளங்கும்.

குடும்பத்திட்ட இயக்கத்தினர் கூறும் ஆலோசனைகள் உண்மையில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனையைமறந்து, வேறுவிஷயங்களுக்குக் கவனத்தைத் திருப்புகின்றன. அல்லாமலும், பிள்ளைகளின் பிறப்புக்குறைவு குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கத்தினர் நிவிர்த்திசெய்யவிரும்பும் தீமைகளை ஒழிப்பதற்குப்பதிலாக அவைகளை அதிகரிக்கச் செய்கின்றதென்று, பல பேர்போன பொருளாதார சாஸ்திரவிற்பன்னர்களும், குடிசனசாஸ்திரநிபுணர்களும் குறிப்பிட்டுள்ளனர். குடும்பக்கட்டுப்பாடு தனிப்பட்ட ஒருசிலருக்குப் பொருளாதாரத் துறையில் சகாயமளிக்குமெனினும், பொதுவில் நாட்டுக்குப் பெருந்தீங்கு விளைவிக்குமென்பதே அவர்களுடைய ஸ்திரமான அபிப்பிராயமாகும்.


எனவே, கருத்தடைமுறைகளை உபயோகிப்பதனுல் தனிமனித, சமூக, பொருளாதாரத்துறைகளில் விளையும்தீங்குகளை மனநிம்மதியுடன் சீர்தூக்கிப்பார்த்தால், புத்தியுள்ள அநேகர் குடும்பக் கட்டுப்பாடென்னும் போலிச் சாஸ்திரக்கொள்கையை, பரிதாபத்துக்குரியமுறையில் சகல பொருளாதார, சமூகஇன்னல்களுக்கும் சிறந்த ஔடதமெனவும், இன்பகரமான சுபீட்சவாழ்வுக்கு இன்றியமையாத இயல்பான சாதனையெனவும் சிந்தனையின்றி ஏற்றுக்கொள்வதை அவதானிக்கும்பொழுது, அவர்கள் எல்லோரும்பொது அறிதுயிலில் அகப்பட்டுள்ளார்கள் என்று கூறுவதே பொருத்தமென எண்ணுகின்ருேம்.

[வளரும்]

### நாவற்குழியிலும் 'யாழ்தேவி'

சமீபத்திலே வடபகுதி றெயில்வேப் பிரயாணசேவைநேரம் மாற்றப்பட்டுள்ளது. புதிய நேரஅட்டவணைப்படி நாவற்குழிஸ்ரேஷனிலும் யாழ்தேவி, உத்தரதேவிஎன்பன தங்கிச்செல்லக் கூடியவசதி யேற்பட்டுள்ளது. அதனுல் இரு"தேவி"களும் யாழ்ப்பாணக்குடாநாட்டிலே இதுவரைதங்கிச்சென்ற றெயில்வேஸ்ரேஷன்களுடன் இப்போதுகோண்டாவில், நாவற்குழிஸ்ரேஷன்கள்இரண்டும் நவமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே !

வைகாசிமாதம் 1-ந்திகதி தொழிலாளர்களுக்கு மாதிரிகையான புனிதர் அர்ச். சூசையப்பர் திருநாள். இந்நன்னளில் உங்களின் புனிதகடமைகள் எவை? அர்ச். சூசையப்பர் மன்னர்வழியில் பிறந்தவராய் இருந்தும் வறுமைச் சீவியத்தையே கடைப்பிடித்து ஒழுகிவந்தார். தம்மனைவியாகிய மரியம்மாவையும், ஏகமகனர் யேசுவையும் தாபரிப்பதில் புனிதர்பட்ட கஷ்டங்கள் எம்மட்டென்று வர்ணிக்கும்தரமன்று. தம்ஏகதொழிலாகத் தச்சுத்தொழிலையே ஆபரணமாய்க்கொண்டு நெற்றிவியர்வை நிலத்தில்விழக் கஷ்டத்துடன் உழைத்து, தம்குடும்பத்தை ஆயுட்காலம்வரையும் தாபரித்துவந்தார்.

அன்புமிக்க இளைஞர்களே! நீங்களும் அப்புனிதர்காட்டிய பாதைவழி நடக்கமுயலுங்கள். பாடின்றிப் பட்டமேது? முயற்சியின்றி உயர்ச்சியேது? உங்களுக்குள்ளே உத்தியோகத்திற்காய் எத்தனையோபேர் தம்வாழ்நாளை வீண்வினையம்செய்கிறர்கள். எல்லாரும் பல்லக்கில்ஏறிக்கொண்டால் அப்பல்லக்கைத் தூக்குபவன் யார்? "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்ற அமிர்தவாக்கை மறவாதிருங்கள். இக்காலத்தில் உத்தியோகத்தை எதிர்பார்ப்பவன் பொன்முட்டை இடும் வாத்தைக் கொன்றவனுக்குச் சமமானவன்.

ஞானப்பிதா

## தஞ்சம் தாராயோ!

"இனியன்"

கற்புநிறை கன்னிமரி நாயகனே நானிலத்தில்
கர்த்தன்ருள் துதித்துநாம் நித்தமும் சேவிக்கவுன்
பொற்புநிறை திருநாமம் போற்றிப் புகழ்ந்திடவே
பேரொளியினைத் தருவீர் மாமறையின் காவலரே.

●

நேயமீட்பராய்ப் பூமிதனில் வந்துதித்த மரிசுதனை
நித்தமுங் கண்மணிபோற் காத்தளித்த தூயோனே
சேயரெமைச் செகத்தினிலே ஆதரித்தே யாண்டிடுமே
செல்வத் தாதையாம் சீர்பெறு சூசைமுனியே.

●

ஏழ்மைமிகும் சீலமுடன் காரிருளாம் பவம்நீக்கி
எழிலொடு ஞாலம்புகழ என்றுமே மிளிர்ந்திடும்
தாழ்மைமிகு பொறையோங்கத் தச்சுத்தொழிலேபுரி
தவத்தோனே தியாகத் திருவுருவே தாதையரே.

●

மாதவனே மகிமையொளி பூத்திலங்கும் மாணிக்கமே
மாபாவியெமக் காதாரம் நீரல்லால் யாருளரே
பூதலத்தில் புண்ணியராய்ச் சீவிக்கவரமருளும்
பாரேற்றும் புனிதவளனே உன்னருமைத் தாசரெமக்கே.

●

அஞ்சலெனத் தொழுதிறைஞ்சும் அடியவரைத் தேற்றிடவே
அரவணைத்து ஆசிரருளும் அன்புருவாம் தந்தையரே
தஞ்சமென ஓலமிடும் தமியர்களெம் மீனக்குரல்
தவமுனியே தயைக்கடலே கேட்டருள் புரிகுவீரே!

# கன்னியின் கடிதம்

மிகவும் பிரியதோழி !

நீர் ஒவ்வொருமுறையும் "கோபிப்பதில் இவருக்கிணை இவர்தான். இன்னருக்குப் பொறுமைஎன்றல் என்னஎன்பது தெரியாது" என்றிவ்விதமாக யாராவது ஒருவரைக்குறித்து ஏதாவதொரு குறிப்புச் சொல்வதைக்கேட்க மிகவும்கவலையாக இருக் இருக்கிறது.

இதுவரையில் உமக்குக் கோபம் உண்டாக்கும்வண்ணம் — பொறுமையைச் சோதிக்கும்வண்ணம் எவரும், எந்தச்சம்பவமும் நடக்கவில்லை, எல்லாச் சூழ்நிலையும் உமக்குச்சாதகமான முறையில் அமைந்திருக்கிறது என்பதால் நீர்என்றும் ஒரேநிலையில் அமைதியுடன் காணப்பட்டால் உமக்கு எந்தப்பெலவீனமுமில்லை; சாந்தமும், பொறுமையும் உம்மிடம் பூரணமாய் உண்டென நீர்நினைப்பது தவறு

'மனிதர்' எனப்பட்ட அத்தனை பேரும்பெலவீனமுள்ளவர்கள்தான். மனிதன் தன் நிர்ப்பாக்கியத்தையும், பெலவீனத்தையும்உணர்ந்து தாழ்ச்சியுள்ளவனுகும்பொருட்டுத்தேவன் ஒவ்வொருவருக்கும் ஒருமேலிடும் துர்க்குணத்தைக் கொடுத்திருக்கிறுர். ஒருவன் தனக்கு இயல்பாயுள்ள துர்க்குணத்தை அடக்குவதற்கு எவ்வளவுதெண்டித்தும் சூழ்நிலைகாரணமாகத் தவறியபின், மனந்தளராமல் மனதைத் திடப்படுத்திக்கொண்டு தன் பெலவீனத்தைத் தேவனுக்கு அறிக்கையிட்டுத் தனக்கு இன்னும் அதிக உதவிசெய்யும்படி தேவனை இரந்து மன்றுடும்பொழுது தேவனுக்கு மிகுந்தமகிமை வருவிப்பதால் அவனின் பெலவீனத்தினுல் அவனுக்குக்கெடுதிநேர்வதில்லை. மாருக அவன்தவறும் ஒவ்வோர்முறையும் மனம்நொந்து தேவனுக்குமுன் தன் பெலவீனத்தை ஒத்துக்கொள்வதால் தேவனுக்கு மிகுந்தமகிமை வருவிக்கிறுன். இதை வெளியில் காணுத நீர் அன்னுர் ஓர்பாவியெனக் கணிப்பது எவ்வளவு தவறு. நீர் குத்திக்காட்டிப் பேசுபவர்களிலும் அநேகர் இத்தகைய மனப்பான்மை உள்ளவர்களாய் இருக்கலாம்.

[illegible]

## உத்தானத்தின் பின்வரும்

# மூன்றும் ஞாயிறுச் சுவிசேஷம்

"மீண்டும் கொஞ்சக்காலம்; அதன்பின் என்னைக்காண்பீர்கள்"
அரு. 16—22)

யேசுக்கிறீஸ்துநாதர் உத்தானத்தின்பின் நாற்பதுதினங்கள் இன்னும் தம்முடைய அப்போஸ்தலருடன் இவ்வுலகில் சீவித்துவந்தார். இதன்பின் பரலோகத்திற்கு ஆரோபணமானுர். தம்மைப்பின்சென்ற இவ்வுலகமக்களுக்கு ஆறுதல் கொடுப்பதற்காக "மீண்டும் கொஞ்சக்காலம்; அதன்பின் என்னைக் காண்பீர்கள்" ஏனெனில், நான் என்பிதாவிடம் போகிறேன் என்ருர்.

நமது திவ்வியகுருவாகிய யேசுநாதர் மறுபடியும் உலகிற்கு வருவார். முதல்முறை ஒருவராலும் மதிக்கப்படாத பெத்லகேமிலுள்ள ஓர்மாட்டுத் தொழுவத்தில் சிறுபாலகனுக வந்துதித்தார். இப்படித்தானு மீண்டும் கொஞ்சக்காலம்; அதன்பின் என்னைக்காண்பீர்கள் என்றுசொன்னவர் தம்மைக் காண்பிக்கப்போகிருர்? இல்லை. சர்வலோகங்களுக்கும் இராசாதி இராசாவாகவும், சர்வசிருஷ்டிகளுக்கும் சிருஷ்டிகராகவும் அணுவளவும் பிழையாத நீதிபதியாகவும் வரப்போகின்ருர்.

அவர் வரும்பொழுது நீதியின்காலமாக விருக்கும். அன்று பெத்லகேம் மாட்டுக்கொட்டிலிலே பிறந்தபோது அன்பினதும், இரக்கத்தினதும் காலமாக இருந்தது. தீர்வையின்நாளிலே அவர்நமக்கு இரட்சகராய் இருக்கும்படி மன்றுடுவோமாக. அவரின் நியாயத்தீர்ப்பை என்னென்றெடுத்துரைப்பது. உலகத்திலுள்ள சகலத்துவமும் நியாயந்தீர்க்கும் நீதிபதியாக நமது யேசுவுடன் சேர்ந்துநின்று நீதிதீர்க்கப்படும். மனிதருக்கெதிராக அவர்கள்செய்த குற்றங்களை வெளிப்படுத்தும். இப்படியென்றல் நியாயத்தீர்ப்பின் அகோரத்தைச் சிந்தித்துப்பாருங்கள்.

—(⌣)—

## நமது பாடசாலைகள்

# பறிமுதலானுல்......?

— செல்வி ருேசலின் சூசைப்பிள்ளை

**தங்கை:** ஏது அக்கா, பாடசாலைகள் பறிமுதலானுல் என்பதுபற்றி எழுதுகிறீர்களே; அப்படியானுல் நம் பாடசாலைகளைக் கொள்ளையடிக்கும் திருடர்கூட்டம் எது? என்பதுதான் புரியவில்லையே.

**அக்கா:** நம் பாடசாலைகள் திருடரால் கொள்ளையடிக்கப் படுதலைப் பற்றி நான் இங்கு எழுதவில்லையே.

**தங்கை:** அப்படியானுல் நீங்கள் எழுதியிருக்கும் விஷயத்தைப்பற்றிச் சற்று விளங்கக்கூறுங்கள் பார்க்கலாம்.

**அக்கா:** தனிப்பட்டவர்கள்நடத்திவரும் சிலதொழில் ஸ்தாபனங்களை அரசாங்கம் தேசியமயமாக்கி வருதலைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர் அல்லவா?

**தங்கை:** ஆம். அக்கா அவ்வாறு தேசியமயமாக்கப்பட்டசேவைகளில் பஸ்சேவையும் ஒன்றல்லவா?

**அக்கா:** ஆம், அதேபோல் அரசாங்கம் பாடசாலைகளையும் எடுத்துநடத்தி வருதல்கூடும். பாடசாலைகள் அரசாங்கத்தால் நடத்தப்பட்டால் அங்கு சமயபாடம் கற்பிக்கப்படுதல் விலக்கப்படலாம். சமயஅறிவு இல்லாதகல்வி "யானைதின்ற விளாம்பழம்"போல் போலிக்கல்வியாகத்தான் இருக்கும். அத்தகைய கல்வியின்பலன் நல்லொழுக்கம் சீர்குலைதலும், சமயப்பற்றும், தெய்வப்பற்றும் மக்கள் மத்தியினின்று அகலுதலும், நாஸ்தீக வாழ்க்கைக்கு அடிகோலுதலுமாகும். மக்கள் துஷ்டத்தனத்தில் தீவிரமாக முன்னேறிக்கொண்டு போவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

**தங்கை:** அப்படியாயின் நம் ஞான அதிகாரிகள் தாம்நடத்திவரும் பாடசாலைகளை அரசாங்கத்தினிடம் ஒப்படைப்பதற்கு ஒருபோதும் முன்வரமாட்டார்களென்றே கருதுகிறேன்.

**அக்கா:** ஆம், தங்காய் நன்றுக யூகித்துக்கொண்டீர். இவ்விதசந்தர்ப்பத்தில் திருச்சபை ஒருபோதும் தன் பராமரிப்பின்கீழ்உள்ள பாடசாலைகளை அரசாங்கத்திடம் கையளிக்கமாட்டாது. ஆகையால், அரசாங்கம் கத்தோலிக்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குதலையும், மற்றும் [illegible]யும் புரியமறுத்துவிடும்.

'சம்பளம் இல்லாத உத்தியோகம் எதற்கு'என்று சில ஆசிரியர்கள் தொண்டாற்றப் பின்வாங்குவார்களே. அப்படியாயின் இத்துணை பெருந்தொகையான கத்தோலிக்க பாடசாலைகளைத் தம்பராமரிப்பின் கீழ்வைத்து நடத்திவரும் நம்ஞான அதிகாரிகள் அங்குபணிபுரியும் ஆசிரியர்களுக்கு எவ்வாறு வேதனம் வழங்கமுடியும்.

**அக்கா:** பாடசாலைகளின் தொகையை இயன்றவரை குறைத்தல் வேண்டும்.

**தங்கை:** பாடசாலைகளின் தொகையைக் குறைப்பதுஎன்றல் சிலஇடங்களில் பாடசாலையை மூடிவிடவேண்டிய நிலையேற்படும். எங்கெந்தஇடங்களில் பாடசாலைகள் மூடவேண்டிய நிலைமை ஏற்படுகின்றதோ பொதுவாக அந்தந்தஇடங்களில் உள்ள மாணவர்களும், குறிப்பாக ஏழைச் சிறுவர்களும் துரதிர்ஷ்டசாலிகளாகி விடுவார்கள். பாவம், அவர்களுக்கு என் ஆழ்ந்தஅனுதாபங்கள்.

**அக்கா:** ஆம், அவர்களுக்காக நாம் அனுதாபப்படத்தான் வேண்டும். இருந்தாலும் பெற்றேர் தம்மால் இயன்றமட்டும் தம்பிள்ளைகளுக்கு வேண்டிய வேதஅறிவைப் புகட்டலாம்.

**தங்கை:** மிகுதியாயுள்ளபாடசாலைகளை நடத்துவதற்கு வழிஎன்ன?

**அக்கா:** பெற்றேரின் ஒத்துழைப்பையும், உதவியையும்பெற்றுப் பாடசாலையை நடத்துவதற்கு வேண்டிய நிதியைத்திரட்டலாம். பாடசாலைகளை நடத்துவதற்கு வேண்டியநிதியைத்திரட்ட ஏதுவாகஉள்ள எல்லாத்துறைகளிலும் மாணவர்களும் தம்மால் இயன்றமட்டும் ஈடுபட்டு ஊக்கத்துடன் உழைத்தல்வேண்டும். ஆசிரியர்கள் தாராளமனதுடன் குறைந்தவேதனத்தை — அதாவது கொடுக்கப்படும்வேதனத்தைப் பெற்றுக்கொண்டு அனைவருக்கும் திருப்தியளிக்கும்முறையில் தொண்டாற்ற முன்வரல்வேண்டும்.

**தங்கை:** நல்லது அக்கா சம்பாஷணையில் அதிகநேரம் செலவழித்துவிட்டோம். பாடசாலைக்கு நேரமாகிவிட்டது வாருங்கள் புறப்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

வைகாசிமாதம் வந்துவிட்டது. "வந்ததே வணக்கமாதம்" என்று ஆர்ப்பரித்துத் தேவமாதாவை நாள்தோறும் வாழ்த்தித் துதியுங்கள். முடியுமானால் தினமும் திவ்வியபூசைக்குப் போங்கள். உங்கள் கோவில்களில் வணக்கமாத ஆராதனைகள் நடைபெற்றால் அவற்றில் பங்குபற்றி மாதாவை மகிமைப்படுத்துங்கள்.

உங்கள் வீடுகளில் மாதாவின் படத்துக்கு அல்லது சுரூபத்துக்கு அழகிய பீடத்தைத் தயார்செய்து தினமும் பூக்கள் சூட்டி அலங்கரித்துவாருங்கள். இன்னும் குடும்ப செபமாலையை முன்னரிலும் அதிக பத்தியாய்ச் சொல்லிவாருங்கள். இவை தேவதாயாரின் மாதமாகிய வைகாசிமாதத்தில் செய்யக்கூடிய சிறந்த பத்திமுயற்சிகளாகும்.

உங்கள் அன்புள்ள அண்ணா

## நானே குற்றவாளி

இரவு ஏழரை மணியிருக்கும். தனிநாயகம் சுவாமியார் தனது அறையில் எழுதிக்கொண்டிருந்தார். இடையிடையே அவர் எழுதுவதை நிறுத்திவிட்டு ஏதோ சிந்தனைசெய்யும் பாவனையாகக் காணப்பட்டார். அப்போது யாரோ கதவில் தட்டும் சப்தம் கேட்டது.

"சுவாமி! கதவைக் கொஞ்சம் திறவுங்கள்" என்று யாரோ கூப்பிடுவதைக் கேட்டார். அந்தக் குரலில் பயமும், பதட்டமும் தொனித்ததை அவர் அவதானித்தார். "இவன் ஏன் இப்படிப் பயந்து சாகவேண்டும்? இவன் யாராயிருக்கலாம்?" என்ற எண்ணத்தோடு "யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?" என்று ஒரு கேள்வியைப் போட்டுவைத்தார்.

"கேள்வி வேண்டாம் குருவே, என்னைக் காப்பாற்றுங்கள்; பிறகு எல்லாம் உங்களிடம் சொல்லுகிறேன்; தயது செய்து கதவைத் திறவுங்கள்" என்று சொல்லி ஒருநீண்ட பெருமூச்சு விட்டான். அவன் விட்ட மூச்சு ஓட்டமும், நடையுமாக அவன் வந்திருக்கிறான் என்பதை மாத்திரம் உணர்த்தியது

சுவாமியார் எழுந்து சென்று கதவைத் திறந்ததுதான் தாமதம் அந்த மனிதன் சரேலென அறையினுள் பாய்ந்தான். அவன் தோற்றத்தைக் கண்டதும் சுவாமியார் ஒருகணம் திடுக்கிட்டார். அவனுடைய கோதி விடப்படாத சுருண்ட தலைமயிரும், முகத்தையே மறைக்கும்படியாக வளர்ந்திருந்த மீசையும், அவனது உடையும் அவன் அசல் பக்காத் திருடன் என்பதை எடுத்துக்காட்டின. அவன் கையிலிருந்த தோற்பை அதை ருசுப்படுத்தியது. "திருடன்" என்று சுவாமியாரை அறியாமலே அவரின் வாயினின்றும் வார்த்தை வெளிவந்தது.

"ஆம், நான் கள்வன்தான்; எல்லாம் சொல்லுகிறேன்; முதலில் என்னை... அதோ! என்னைத் துரத்தி வருகிறார்கள் பொலிசார்; அவர்கள் கையில் சிக்காதவாறு என்னைக் காப்பாற்றுங்கள் குருவே!" என்று மன்றாடினான்.

"உன்னை நான் காப்பாற்றுகிறேன்; ஆனால், நீ ஒன்று செய்யவேண்டும்" என்றார் குருவானவர்.

"ஒன்றென்ன குருவே, ஒன்பது வேண்டுமானாலும் செய்கிறேன்; சீக்கிரம் சொல்லுங்கள் சுவாமி" எனக் கெஞ்சினான்.

"இதில் இருப்பது பணம்தானே! நீ இதைத் திருடினாயல்லவா?" என்று அவன் கையோடு கொண்டுவந்த தோற்பையைச் சுட்டிக்காட்டி, "நீ இதை உடையவனுக்குக் கொடுக்க உடன்படுவாயா?" எனக் கேட்டார் சுவாமியார்.

"இந்த இக்கட்டான சமயத்தில் என்னைக் காப்பாற்றினால், பணத்தைத் திருப்பிக் கொடுப்பதுடன் இப் பயங்கரத் தொழிலையே விட்டுவிடுவேன் சுவாமி" என உறுதி கூறினான்.

"சரி மகனே, பயப்படாதே! அதோ, நீ அந்த அறையுள் சென்று கதவைத் தாளிட்டுக்கொள்" என்றார் சுவாமியார்.

அவனுக்குப் போன உயிர் திரும்ப வந்ததுபோல இருந்தது. பாய்ந்து சென்று கதவைத்தாளிட்டுக்கொண்டான்.

ஓடிவந்த இரு பொலிஸ் புலிகளும், இன்னுமோர் மனிதனும் குருமனையின்பக்கம் வந்துவிட்டனர்.

"சுவாமி! இந்தப் பக்கம் யாராவது வந்தானா?" என்றார் இன்ஸ்பெக்றர். கூட வந்த மனிதனும், மற்றப் பொலிஸ் புலியும் சுவாமியாரின் அறையினுள் கண்ணோட்டம் விட்டனர். சுவாமியார் சற்றுத் திகைத்தவர்போல் நின்றார்.

இன்ஸ்பெக்றர் சேர்! இதோ, திருட்டுப்போன தோற்பை" என்று அதை மற்றப் பொலிஸ்காரன் எடுத்துவந்தான். இன்ஸ்பெக்றர் ஆச்சரியத்தால் சுவாமியாரின் முகத்தைப் பார்க்க, அவர் முகம் கீழ் நோக்கியிருந்தது.

"சுவாமி! இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? திருட்டுப்போன பொருள் உங்கள் அறையில் இருக்கிறதே" என்றார் அகம்பாவத்துடன் இன்ஸ்பெக்றர். சுவாமியார் எதுவுமே பேசவில்லை.

"சுவாமி! உங்களுக்கு இந்தப் பணப்பை எங்கிருந்து கிடைத்தது? உண்மையைச் சொல்லுங்கள் சுவாமி; ஒன்றுமே பேசாமல் நிற்கிறீர்களே சுவாமி" என்றார் சிறிது அனுதாபத்துடன் இன்ஸ்பெக்றர். குருவானவரின்வாய் அசையவில்லை.

"சுவாமி! சட்டப்படி தொழில் புரிய நான் கடமைப்பட்டவன்; சரி, தயவுசெய்து பொலிஸ்ஸ்ரேஷனுக்கு வருகிறீர்களா?" எனக் கேட்டார் இன்ஸ்பெக்றர்.

(அடுத்த இதழில் முற்றும்)

## இருள்போக்கும் இன்பநாதா!

[எனையாளும் மேரிமாதா என்ற மெட்டு]

பல்லவி

அருள்தாரும் யேசுராசா  
இருள்போக்கும் இன்பநாதா — எங்கள்  
இருள்போக்கும் இன்பநாதா.

சரணங்கள்

எளியோரின் பாவத்தாலே பரலோக வீடு துறந்து  
ஒளியாகி நீரும் பூவில் மரியாயின் மகனாய்ப் பிறந்து

கொடியோராம் யூதர் கையில் ஈனரில் காதல் கொண்டு  
முடிமன்ன ரடிபணியும் முதல்வா தத்தம் செய்தீரே!

எண்ணற்ற அடிகளாலே புண்ணாகியே கற்றாணில்  
கண்ணற்ற பாவிக்காக கொடுமைப் பட்ட ரந்நாளில்

பாரச் சிலுவை தோளில் ஏந்திக் கல்வாரி நாடி  
தீராத் துயரனுபவித்தீர் பாவி எமக்காய்க் கோடி

பொல்லாத கொடிய கள்வர் நடுவிலே நாயகனாய்  
கல்வாரிக் குன்று மேலே பலியானீர் ஏக சுதனாய்.

எல்லை யில்லாத ஜோதி சுடர்வீசிப் பாரில் தங்க  
வல்லபரன் நாள் மூன்றில் உயிர்த்தார் மகிழ்வு பொங்க.

ஆயனாய் வந்துதித்த நேயனே இரட்சகனே!  
சேயரெமக் கெந்நாளும் ஆசீர்தாரும் தூயோனே!

— 'இனியன்'

## மன்றாட்டுப்பலன்

— A. V. துரைரட்ணம், நல்லூர் —

பிரான்சிஸ், றெஜீனா, அன்ரன் என்போர் சகோதரர். இவர்களுள் பிரான்சீஸ் மூத்தவன். றெஜீனாவும், அன்ரனும் சிறுபராயத்தில் பூசைக்குச் செல்வதற்கு விரும்பமாட்டார்கள். அவர்களது தமையனான பிரான்சீசின் தொந்தரவு காரணமாகவும், தாய்தந்தையரின் நச்சரிப்பாலுமே பூசைக்குச் செல்வார்கள். பூசைக்குச்சென்றாலும் அங்கு பராக்குப் பார்த்துக்கொண்டும், செபம் சொல்லாமலும் நேரத்தை வீணாக்குவார்கள். இவற்றைத் தமையனான பிரான்சீஸ் கண்டிப்பான். அவனுக்கு எதையும் செய்யலாம், கோவிலில் விளையாடுவதோ, செபம் சொல்லாமல் ஊமையைப்போல் பராக்குப் பார்த்த வண்ணமும், பராகண்டிதமாயும் இருப்பதென்றாலோ பொல்லாத கோபம்வரும். அதனால் மிகவும் கோபமாய்ச் சகோதரரைக் கண்டிப்பான். அவன் எவ்வளவுக்கு அவர்களைக் கண்டித்தானோ அவ்வளவுக்கு அவர்களுக்குப் பூசைமேலும், செபங்கள்மேலும் வெறுப்பு ஏற்பட்டது. அதிகாலையில் எழுந்து அவசரமவசரமாய்ப் பூசைக்கு ஓட வேண்டி இருக்குதே! பிந்திச் சென்றால் அண்ணாவின் கோபத்துக்கும் ஆளாக வேண்டியிருக்குதேயென எண்ணி ஆத்திரப்படுவார்கள். எங்களுடைய அம்மா, அப்பா எல்லாம் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் தானே பூசைக்குச் செல்லுகிறார்கள். அதைப்போல் நாங்களும் செய்தால் என்ன? அண்ணாவுக்கு ஒவ்வொரு நாளும் போக விருப்பமானால் போகட்டுமே. அதற்கு எங்களை ஏன் தொல்லைப்படுத்த வேண்டுமென இருவரும் சேர்ந்து முணுமுணுப்பார்கள்.

பிரான்சீசும் யோசித்துப் பார்த்தான். அவர்களுடைய போக்கில் ஒருவிதமான மாறுதலும் இல்லை. வரவர அவர்கள் பூசை பிரார்த்தனையை வெறுத்தார்கள். இதனைத் தடுக்கவும், அவர்களை நல்வழிப்படுத்தவும் பிரான்சிஸ் ஓர் உபாயம் பண்ணினான். அதாவது, பூசைக்கு வர உங்களுக்கு விருப்பமில்லாவிடில் வர வேண்டாம். அப்படி வராதிருக்கும் நாளில் தேவதாயாரைக்குறித்து "எங்களை நல்லவர்களாகவும், பத்தியுள்ளவர்களாகவும் ஆக்கியருளவேண்டுமென நன்கு மன்றாடி மூன்று பிரியதத்தமந்திரத்தை நல்ல பத்தியுடன் சொன்னால் போது"மெனச் சொன்னான். அவர்களுக்குத் தமையனார்மேல் நல்ல சந்தோஷமேற்பட்டது. பூசைக்குப் போகாவிடில், மூன்றல்லப் பதினைந்து இருபது பிரியதத்தமந்திரமும் சொல்லலாமேயெனத் தங்களுக்குள் கதைத்துக்கொண்டனர்.

"நல்ல பத்தியாய் அல்லவா அண்ணா சொல்லச்சொன்னார். நல்ல பத்தியாய் என்றால் என்ன மாதிரியக்கா" என அன்ரன் கேட்டான். தமக்கைக்கும் விளங்கவில்லை யாத

[தொடர்ச்சி 3-ம் பக்கம்]

### சரியான விடை

சென்ற 21-4-60 இல் வெளிவந்த கண்டுபிடியுங்கள் என்னும் பகுதியின் சரியான விடை:

பண்டாரநாயக்கா.

விடை அனுப்பியவர்:  
ஜி. எம். ஞானப்பிரகாசம்,  
சென் கிளேயர், தலவாக்கொல்லை.

### கண்டுபிடியுங்கள்

மூன்று எழுத்துக்களைக் கொண்ட ஒரு இடத்தின் பெயர்.

கரண்டியில் உண்டு. அகப்பையில் இல்லை.  
கண்ணில் உண்டு, காதில் இல்லை.  
கரடியில் உண்டு, கழுதையில் இல்லை.

செல்வி க. ஞானம்மா,  
ஆஸ்பத்திரி வீதி,  
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னியின் கடிதம்

[ இளைஞர்பக்கத் தொடர்ச்சி ]

எனவே, இவற்றைத் திருத்திக்கொள்ள விரும்பினுல் "மற்றவர்களுக்குக் கோபத்தையூட்டும், பொறுமையைச்சோதிக்கும் எத்தனைநிகழ்ச்சிகள் பிறராலும், சந்தர்ப்பசூழ்நிலை காரணமாகவும் அவர்களின் அன்றாடசீவியத்தில் நடைபெறுகின்றன என்பதையும், அவ்வண்ணம் உமக்கு நேரிட்டால் உமது பொறுமைக்கு எந்தஅளவில் எல்லையிடலாம் என்பதையும் கணித்துப்பாரும். இவ்விதம் கணக்கிட்டுப்பார்த்தால் சிலவேளை அவர்கள்தவறும் ஒவ்வொருமுறைக்குமிடையில் நீர்பத்துமுறை தவறிவிடுவீர் என்பதாகக் கண்டுகொள்வீர். எனவே, நீர்அதிகம் பெலவீனமுள்ளவராயிருப்பதால்தான் தேவன் உம்பெலவீனத்தை அதிகப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் உமக்கு அளிக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்தி, வீண்'அளப்பு'க்களில் கவனமெடுக்க வேண்டாமென உம்மைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
உமதன்புள்ள சிநேகிதி,
இல. 001.

---

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2410**
**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

கரம்பன்
V. மாணிக்கம் கைம்பெண் யோகம்மா
— வழக்காளி.

எதிராக
வண்ணார்பண்ணை, கிழக்கு
1. கந்தையா சேனாதிராசா
2. ஷ்டியூர் பெண் சிவஞானம்மா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 2410-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1960-ம்ஆண்டு ஆனிமீ 1-ம்உ புதன்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3000-மும், ரூபா 1,500-க்கு 2-9-58 தொடக்கம் 3-3-59 வரை 15 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 222/67½சதம். முதல் வட்டியில் ரூபா 1000-மும், கோட்டுச் செலவில் ரூபா 125-ம் கொடுபட்டது.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் தீவுப்பகுதி, வேலணைக்கோவிற்பற்று, வேலணை மேற்கிறை, "ஆலம்புலம்" பர. நில. இல. 13⅛ (பர. நில. இல. பதின்மூன்றுடன் எட்டில்ஒன்று) எல்லை: கிழக்கு—வயித்தியநாதர் பெண் நல்லமுத்துவிற்குரியவாதனம். வடக்கு—முத்துக்கணபதி சின்னத்தம்புவிற்கும், மறுபேர்கட்குமுரியவாதனம். மேற்கு—சுப்பிரமணியம் பெண் நாகம்மாவிற்குரிய வாதனம். தெற்கு — ஒழுங்கை. இதடங்கலும்.

2. ஷ்டியிறை "பாலன்கலடுபள்ளம்" பர. நெ, இல. பதினேழு (பர. நெ. இல. 17). எல்லை: கிழக்கு — தம்பியப்பா பெண் செல்லம்மாவிற்கும், மறுபேர்கட்குமுரியவாதனங்கள். வடக்கு — நாகலிங்கம் செல்லையாவிற்கும், மறுபேர்கட்குமுரிய வாதனங்கள். மேற்கு — நாகன் பெண் கதிராசிப்பிள்ளைக்கும், மறுபேர்கட்குமுரியவாதனங்கள். தெற்கு—கணபதிப்பிள்ளை நாகலிங்கத்திற்கும், தம்பியப்பா பெண் செல்லம்மாவிற்குமுரிய வாதனங்கள். இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர்,
1960-ம் ஆண்டு சித்திரைமீ 16-ந் திகதி.

---



## 22-ம் வருட மரண ஞாபகம்

"ஆண்டவரே! உமது வீட்டின் அலங்காரத்தையும், உமது மகிமையிருக்கிற இடத்தையும் விரும்பினேன்."
சங். 25—21

எங்களால் என்றென்றும் மறக்க இயலாதவகையில் நேச பாசத்தோடிருந்த வண. எஸ். ஏ. பெஞ்சமீன் அடிகளின் ஆத்துமம் இறைவன் திருநிழல் சேர்ந்த 22-ம் ஆண்டு இம்மாசம் 13-ம் திகதி நிறைவுறுகின்றது. இந்நாளில் வதிரி அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் இவரின் ஆன்மசாந்திக்காக ஓர் துக்கப்பாடற்பூசை நடைபெறும். இதைக்கண்ணுறும் சங். குருமார், சந்நியாசர்கள், கன்னியாஸ்திரிகள், விசுவாசிகள் யாவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு மிக விநயமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கரவெட்டி, பி. லூக்கேஸ்பிள்ளை.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2718**

நல்லூர்
சடையர் சுப்பிரமணியம்
— வழக்காளி.

எதிராக
நல்லூர்
1. V. இராசையா கைம்பெண் தையல்அம்மாவும்,
2. கனகசபை இராசநாயகமும்,
3. மனைவி தனலெட்சுமியும்,
4. வைத்திலிங்கம் சண்முகநாதனும்,
5. மனைவி பூரணமும்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2718-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1960-ம் ஆண்டு யூன் (June) மாதம் (ஆனி 11-6-60) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5560-ம், மேலும் ரூபா 3500-க்கு 24-2-59 தொடக்கம் 12-5-59 திகதி வரைக்கும், வருடமொன்றுக்கு 12% வட்டியும், அதன்பின் கூட்டுத்தொகை இறுபடும்வரைக்கும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 295-67½ சதமும். ரூபா 1500 கொடுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்கோவிற்பற்றுநல்லூர் இறை" துக்குனிப்பணிக்கன் வளவு" குளிகள் 13½ யும், வீடும், பயிர்களும் இதற்கு எல்லை: கிழக்கு—சடையர் சுப்பிரமணியத்திற்கு உரிய ஆதனம். வடக்கு—சுப்பிரமணியம் இராசையாவுக்கும், சுப்பிரமணியம் நடராசாவுக்கும் உரிய ஆதனம். மேற்கும், தெற்கும்—ரோட்டு. பதிவு இல. D.228/72.

2 நல்லூர் இறை "துக்குனிப்பணிக்கன் வளவு" குளிகள் 9 $\frac{25}{32}$-ம், கிணறும், பயிர்களும். எல்லை: கிழக்கும், வடக்கும்—ரோட்டு. மேற்கு—வைத்திலிங்கம் மனைவி சிவகாம்ப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு — ஒழுங்கை. பதிவு இல. D. 228/73.

தா. செல்லையா,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

---

## நன்றித் துதி

பரிசுத்த சதாசகாய அன்னையினதும், புனித யூதாததேயுவினதும் உதவியினால் நான் கேட்டுக்கொண்ட வரத்தைத் தேவன் தந்தருளினார். அவர்கள் நாமம் புகழப்படுவதாக. இன்னும் என் குடும்பத்தில்உள்ள [illegible] களாக. [illegible] பிரசுரிக்கிறேன்.

அடியாள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2525**
**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், கந்தர்மடம்
வைத்திலிங்கம் செல்லையா —வழக்காளி.

எதிராக
யாழ்ப்பாணம்
நாவாந்துறை பீச்ரோட்டிலிருக்கும்
1. சவிரி கைம்பெண் தங்கமும்
2. யோசேப்பு மைக்கேலும்
3. பெண் மரியைலோமேயும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2525-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1960-ம்ஆண்டு ஆனிமீ 11-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,458-60-உம், 30-10-58 தொடக்கம், 17-3-59 வரைக்கும் ரூபா 1. 170-க்குப் 12வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 224 ரூபா 35 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை வடமேற்குஇறை, "பாலையடியும், வடக்கிராயும்" பரப்பு நெற். இலா. 2-உம், குளி 5-ம், வீடும், செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—கைஒழுங்கை முகப்பும், அந்தோனிமுத்து பத்மநாதனுக்கும், மறுபேருக்கும் உரியஆதனம் வடக்கு—மீராய்சாய்பு பெண் முகிலம்மாவுக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். மேற்கு—அந்தோனி குரிசுவுக்குரிய ஆதனம். வடக்கு — வயித்தி அதிரியானுக்குரிய ஆதனம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
35, 4 ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 9-4-60

---

## பிழை திருத்தம்

சென்ற 28-4-60இல் வெளியான 'பாதுகாவல'னிலே 8-ம் பக்கத்தில் பிரசுரஞ்செய்யப்பட்டிருந்த M. B. 2668, M. B. 2922 எனும் இலக்கத்தைக் கொண்ட கோட்டுவிற்பனவு விளம்பரங்களின் இறுதியிலுள்ள ஆண்டு, மாதம், திகதிகளை 1960-ம் வருஷம் பங்குனி மாதம் 31-ம் திகதியென்று திருத்தி வாசித்துக்கொள்க.

---

## நன்றித் துதி

முடியாத காரியங்களின் சுத்தவாளியாகிய அர்ச். நீற்றம்மாளுடையவும், யேசுவின் சிறிய புஷ்பத்தினுடையவும் மன்றாட்டினால் எனக்கு உண்டானவியாதி சுகமானதற்கு நன்றி கூறுகிறேன். இன்னும் பூரணசுகங்கிடைக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

நவக்கிரி, அ. சவிரிமுத்து.

* * *

## நேர்த்தியின் பூர்த்தி

தாயே! நான் பல நாட்களாக ஓர் நோயினால் வருந்திப் பலவகையான மருந்துவகைகளை உட்கொண்டும், அந்நோயில்நின்று மீளமுடியாது வருந்தினேன். இறுதியில் உம்மைவேண்டினேன். என் வேண்டுதலின்படி உமது அருளைப்பொழிந்து, என்நோயைத்தீர்த்து என்னைக் காத்தீர்.

உமது மகிமையை வாழ்த்துவேன். உமது அருளை மேலும் மேலும் என் போன்றோர்மேல் பொழிவீராக.

யாழ்ப்பாணம், மலர் அல்போன்ஸஸ்.

---

## அறிவித்தல்

வெட்டுக்காட்டில் பத்து (10) ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கிருக்கிறது. தேவையானோர், கீழ்க்காணும் விலாசத்துக்குஎழுதி விபரங்களை அறிந்துகொள்ளவும்.

விலாசம்:

சி. கனகரத்தினம், 52-ம் நம்பர்வீடு,
3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

---

## NOTICE

M. D. J. Nicholas Appuhamy of the Lanka Musical Works will be at Jaffna for Two Weeks from 1st May, 1960, at The Renown Bakery, Small Bazaar, Jaffna to undertake the Repairing and Tuning of all Musical Instruments, Piano, Organ, Harmonium etc.

Repairing of Type-writers is also undertaken.

**M. D. Nicholas Appuhamy,**
**Bopitiya,**
**Pamunugama.**

---

## AUCTION SALE

A Mahogany tree, height 20 feet and girth 14 ft. 8 ins. will be sold on 14-5-60 at 3-00 p. m.

**A. W. Rajasekaram,**
**Principal,**
**St. John's College, Jaffna.**

---

## சபாநாயகரும் பொதுத் தேர்தலும்

சமீபத்தில் கலைக்கப்பெற்ற பாராளுமன்றத்தின் சபாநாயகராகத் தெரியப்பட்டிருந்த திரு. டி. பி. சுபசிங்கா நான்குதினங்கள்தான் சபாநாயகர்பதவியை வகித்திருந்தார். அந்த நான்கு தினங்களிலும் அவர் பலவருட அனுபவமுடையாரைப்போன்று நெருக்கடியான தருணத்தில் பாராளுமன்றகூட்டத்தைப் பாரபட்சமின்றிச் சிறப்பாக நடத்திப் பாராட்டுதலைப் பெற்றிருக்கின்றார். அதனால் அடுத்துவரும் பொதுத் தேர்தலிலே ஜனநாயக பாரம்பரியத்தைப் பின்பற்றி ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்காபிரஜா தந்திரக்கட்சி, கம்யூனிஸ்த கட்சி, மக்கள்ஐக்கிய முன்னணிக்கட்சி, சமசமாஜகட்சியாகிய ஆறுகட்சிகளும் அவருடன் போட்டியிடாதிருக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

## தேர்தல் ஆட்சேபமனுக்கள்

சென்றபொதுத்தேர்தலில் கேகாலை, புத்தளம், மகாரை, யாழ்ப்பாணம் எனும் நான்குதொகுதிகளிலும் வெற்றிபெற்ற பிரதிநிதிகள்நால்வரினதும் தேர்தலைஆட்சேபித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமனுக்கள் விசாரணைசெய்யப்படவிருக்கின்றன. பாராளுமன்றம் கலைக்கப்பட்டபோதிலும் இந்நான்கு ஆட்சேபமனுக்களும் விசாரணைசெய்யப்பட்டேதீரும். மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் வருகிறஆடிமாதம் நிகழும் பொதுத்தேர்தலில் இந்த நால்வரும் போட்டியிடுவதற்குத் தடையில்லை. ஆனால், சென்றபொதுத்தேர்தலிலே அவர்கள் தேர்தல்சட்டத்தை மீறியதாகக் காணப்படுமிடத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 5-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org